508

REGD. No. M. 2913.

ஆர்யதர்மம்

வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

சந்தா விபரம்.
[தபால் சிலவுள்பட]

ஜீவிய சந்தா ...	ரூ. 50
ஒரு வருஷ சந்தா ...	ரூ. 3
ஆறுமாத சந்தா ...	ரூ. $1\frac{1}{2}$

தனிப்பிரதி ஒரணா
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்

விளம்பர விகிதம்.

ஒரு முழுப்பக்கம் ஒரு தடவை	ரூ. 20
அரைப்பக்கம் ஒரு தடவை	ரூ. 12
ஒருபத்தி ஒரு தடவை	ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு ஒரு தடவை	அணா 8

நீண்டகால விளம்பரங்களுக்கு தனி சார்ஜ்.

பு-25 | கும்பகோணம் விக்ரம-ஸு புரட்டாசி-மீ 25உ 1940-ஸு அக்டோபர்-மீ 10 உ | ஸ-40

ஹிந்துக்கள் கொலை செய்யப்படுகின்றனர்

ஸிந்துவில் அராஜக நிலைமை

கராச்சி, ஸுக்கூர் முதலிய விடங்களில் மஹம்மதிய மூர்க்கர்கள் ஹிந்துக்களைக் கொலை செய்யும் கொடுமை அதிகரித்து வருகிறது. சென்ற வாரம் சில ஹிந்துகள் சுட்டுக் கொல்லப் பட்டார்கள். வீட்டு திண்ணையில் படுத்துறங்கிய ஒரு ஹிந்துச் சிறுவன் கொல்லப் பட்டான். வண்டியில் [illegible] பகிரங்கமாகக் கொல்லப் படுகிறார்களாம். காந்திஜி, பேச்சு ஸ்வதந்திரத்திற்காகப் பாடு படுகிறார். வைஸ்ராயோ, கக்ஷித்தலைவர்களை ஸரிப்படுத்தும் வேலையில் மூழ்கிருக்கிறார். ஸிந்து கவர்னரும், மந்திரி ஸபையும் அந்த மாகாண அபாய நிலைமையைக் கவனித்து தக்க ஏற்பாடு செய்ய யோஜித்து வருகிறார்களாம்!

இன்னும் என்ன ஆபத்தோ?

சென்ற வாரத்தில் உலக ராஜ்ய நிலைமையில் தடபுடல் நடக்கிறது. ஜப்பான்—ஜர்மனி, இடாலி ஒப்பந்தம். ஸ்பெயினுக்கும் ரஷ்யாவிற்கும் ஜர்மன் மந்திரி ஓடியோடிப் பேசுகிறார். ஹிட்லரும், முஸலோனியும் பிரன்னர் என்றவிடத்தில் ஸந்தித்துப் பேசியதைப் பற்றி வெகு விசேஷமாகப் பேசப்படுகிறது. யுத்தநிலைமைதீவ்ரமாகக் கூடுமென்றும், ஜர்மனி புதியதாக ஒரு ஸமாதான யோஜனையை வெளியிடுமென்றும் சொல்லப் படுகிறது. யுத்த ஆபத்து நீங்கும் காலம் எதுவோ?

சேம்பர்லேன் ராஜிநாமா

பிரிட்டிஷ் யுத்த ஸபையிலிருந்து மிஸ்டர் சேம்பர்லேன் ராஜிநாமா செய்துவிட்டார். தமது சரீர அஸௌகர்யம் காரணமாகவே தாம் நீங்கியதாக அவர் தெரிவித்துள்ளார். இதனால் மந்திரி ஸபையில் சில மாறுதல்கள் செய்ய வேண்டியதாயிற்று.

காந்தி பிறந்ததினம்.

ஸ்ரீமான் காந்தியின் 72-வது பிறந்த தினத்தை இந்தியாவில் காங்கிரஸ் வாதிகள் கொண்டாடினார்கள். காந்தியை, "கண்ணுக்குப்படும் கடவுள்", என்றார் ஒருவர். மற்றொருவர் அவரை மதாசாரியார் என்கிறார் வேறு ஒருவர் அவரை தபஸ்வி, என்று வர்ணிக்கிறார். இன்னும் சிலர் அவரை தீர்க்கதர்சியென்றும், ஹிந்துமத ரக்ஷகரென்றும், ஸமூஹச்சீர்திருத்தக்காரரென்றும் ஒரு ஒரு அவதார புருஷனென்றும் மனம்போன படியெல்லாம் மகிழ்ந்து பாடினார்கள். இந்த பிறந்த தினத்திற்கு "ஜயந்தி" என்ற வைதிகப் பெயரும் கொடுக்கப்பட்டது. தீண்டாமையை விலக்கி ஆலயத்தை அழித்த பெருமையையும் பலர் பேசிக்களித்தனர்.

ஸ்ரீமத் வேதாந்த தேசிக [illegible]

பிரதிவாதி பயங்கர மடாதீச ஸ்ரீ கிருஷ்ணமாசாரியார், ஸ்ரீ அண்ணங்காசாரியார் ஆகிய வித்வான்களுடைய மேற்பார்வைக்குட்பட்டு, தி. அ. ஸ்ரீ ஸம்பத் குமாராசாரியர், எம். ஏ. அவர்களால் வெளியிடப்பட்டு வரும் மேற்கண்ட பெயருள்ள கிரந்தமாலையின் 1, 2, ஸஞ்சிகைகள் வரப்பெற்றோம். இதைப் பற்றிய [illegible] அடுத்த இதழில் வெளியாகும்.

கார்யக்கமிட்டி கூட்டம் 11-உ நடக்கும்.

வைஸ்ராய்-காந்தி ஸம்பாஷணை முடிவினால் ஏற்பட்ட நிலைமையையோஜிக்கவும் மேற்கொண்டு காங்கிரஸ் செய்யவேண்டிய வேலைத்திட்டத்தைப் பற்றியும் யோஜிப்பதற்காக 11-உ யன்று வார்தாவில் கார்யக் கமிட்டிக்கூட்டம் நடக்கப்போகிறதை தேசம் முழுவதும் சிரத்தையுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது.

திப்பிராஜபுரம்.

ஸ்ரீ ப்ரும்ம வித்யா ஸபா:— 17-9-40 செவ்வாய்கிழமை தினம் திருநெல்வேலி ஸுமானந்தஸ்வாமிகள் குமாரரும், ஆஸ்திகரும், ப்ரபல வக்கீலுமான ப்ரும்மஸ்ரீ கிருஷ்ணஸாமியர் அவர்கள் மாலை 3 மணி முதல் 6 மணி வரை இனியதோர்ப்ரஸங்கம் செய்தார்கள் வேதம் அபௌருஷேய மென்றும் கர்மானுஷ்டானம் அவசிய மென்றும், நாம ரூபாத்மகமான உலக தத்வத்தையும் ஸாக்ஷாத் ஸ்ரீ ப்ரும்ம தத்வத்தையும் பற்றியும் வெகுவாக அநேக சாதாரணமான லௌகிக திருஷ்டாந்த பூர்வகமாகவும் லளிதமாகவும் பேசினார்கள் உபன்யாஸகர் நன்கு உபசரிக்கப்பட்டும் சிலரின் வேண்டுகோளுக்கிணங்கி மறுபடியும் வருவதாகவும் சொல்லி மதராஸ் போய் விட்டார்கள்

21—9—40உ சனிக்கிழமை தஞ்சாவூர் ஆச்ரமவாஸி ஸன்யாஸிகள் தற்கால நவநாகரீக போக்கை வெகுவாகக் கண்டித்தும், கிருமத்தோர்களிலாவது சிஷ்டாசாரம் ஸரிவர கடைபிடித்து நடத்தலின் ஆவச்யகத்தைப்பற்றியும் உருக்கமாயும் கம்பீரமாயும் உபன்யஸித்தார்கள்

27—9—40உ வெள்ளிக்கிழமை (ஏகாதசி) வரகூர் ப்ரும்மஸ்ரீ சுப்பிரமணிய சாஸ் [illegible] ஏகாதசி மஹிமையைப்பற்றிச் சொன்னார்கள்

28—9—40உ சனிக்கிழமை தினம் திருவையாறு ப்ரும்ஸ்ரீ கணபதிசாஸ்திரிகள் அவர்கள் சிவோத்கர்ஷத்தைப்பற்றி உபன்யஸித்தார்கள். (க. கி.)

வைதிக ஸமாஜம் கும்பகோணம். ஓர் மறுப்பு

சென்ற வாரத்தில் வெளிவந்த ஆர்யதர்மத்தில் ஷை ஸமாஜமானது மன்னார்குடி பிர்மஸ்ரீ சாஸ்திரிகளின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டதாய் வெளிவந்தது தவறு. எப்பொழுதும் ஸ்ரீ மன்னார்குடி சாஸ்திரிகளின் தலைமையில் நடக்கவேலையில் லை ஸ்ரீ சாஸ்திரிகள் ஆலோசனை சொல்பவராகவே இருந்து வந்தார். முதல் ஆண்டில் அச்சாபீஸ் டி. எம். நாராயண சாஸ்திரியும் மறுவருஷம் வி. கணபதி சாஸ்திரியும் தலைவராக இருந்து வந்தனர். தவிற பாக்கியுள்ள விஷயங்களை நான் மனப்பூர்வமாய் அங்கீகரிக்கிறேன். ஒரு மெம்பர்.

லலிதா த்ரிசதி

நாகரலிபியில் மூலமும், நாமாவளியும் விலை ரூ. 0—3—
ஷை பாஷ்யம் ரூ. 1—0

கிடைக்குமிடம்:— ஸ்ரீ ஜனார்த்தன கூடம், லிமிடெட், கும்ப

மதுரை

அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கம்

7-வது வருஷ ஸம்மேளனம்

அத்யக்ஷர் ஸ்ரீ கோகுலதாஸின் பிரசங்கம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

அதன் ஸ்தாபனம்

ஹிந்துக்களின் வாழ்க்கை நிலைக்கு விதி நிஷேதங்களை வகுத்துள்ள நூல்கள் பரம்பொருளாகிய சர்வேச்வரனுடைய ஆக்ஞைகள் என்பதும் அவைகள் குடிகளும் அவர்களை ஆளும் அரசர்களும் ஒருங்கே மதித்துக் கீழ்படிந்து நடப்பதற்கு உரியவை என்பதும் ஹிந்துகளின் கொள்கை. ஹிந்து தேசத்தில் ஹிந்து ராஜாங்கங்கள் எல்லாவற்றிலும்ம் இதக்கொள்கை அனுஸரிக்கப்பட்டு இருக்கிறது. இப்பொழுதும் அரசாளும் ஹிந்து ராஜாக்கள் இதைக் கூடியவரை அனுஸரித்தே வருகிறார்கள். மேல்நாட்டு அரசியல் முறையும், அதை ஒட்டின கல்வி முறையும் நம்தேசத்தில் குடிகொண்ட காலம் முதல் பிரஜைகளின் ஆட்சியில் எவ்விதச்சட்டமும் செய்து அமுலுக்கு கொண்டுவர அரசனும் பிரஜைகளின் பிரதிநிதி சபைகளுக்கும் அதிகாரமுண்டு என்னும் ஒரு நூதன எண்ணம் நம் ஜனங்களுக்குள் உலாவ ஆரம்பித்தது. அனாதி ஸித்தமான பழக்க வழக்கங்கள் அதது நடையாடி வந்த ஜன சமூஹத்திற்கு நன்மையாக இருந்திருக்கிறபடியால் நிப்பந்தனைக்[illegible]டு அவ்வதப் பழக்க வழக்கங்களும் இதரச் சட்டங்களைப்போலவே அமுலடைய ஆகும் என்ற கொள்கையும் ஹிந்துக்களின் தார்மிக அனுஷ்டான முறையில் ஒரு பகுதி ஆகும். இவைகளையெல்லாம் திருத்தி அமைக்க அரசாங்கத்திற்கு அதிகாரம் உண்டென்னும் கொள்கை மேல்நாட்டுக் கல்வியின் விருத்தியோடு தானும் விருத்தியாயிற்று. ஆங்கிலேயருக்கு உதவியாகும் பிரதிநிதிகளாகவும் அவர்கள் அமைத்த முறையில் அரசாங்கத்தை நடத்துபவரும், அவர்களுக்கு உதவியாகி கௌரவ ஸ்தானங்களைகூட வகிப்பவர்களும் மிகப்பெரும்பாலர் ஆங்கிலக் கல்வி உடையாராகவே அமைந்தார்கள். ஆதலின் இவர்கள் ஹிந்து ஜன சமூகத்துக்குத் தங்களையே பிரதிநிதிகளாக ஆக்கிக்கொள்வதும் அதை அரசாங்கத்தார் நம்புவதும் ஆயிற்று.

ஆதியில் மேல்நாட்டுக் கல்வியில் மேம்பாடு அடைந்தவர்கள் நம் ஹிந்து தர்மசாஸ்திரங்களிலும் அதன் தத்துவங்களிலும் போதுமான உணர்வுஅறிவும் உடையவராய் இருந்தார்கள் பிற்காலத்தில் அன்னிய நாட்டுப் பழக்கவழக்கங்களும் வாழ்க்கை முறைகளும் கொஞ்சம் கொஞ்சமாக ஆங்கிலக் கல்விசாலைகள் மூலமும் உத்தியோக ஸ்தாபனங்கள் மூலமும் நம் ஜனசமூகத்தில் அதிகரித்துவரத் தலைப்பட்டதாலும், நம் ஹிந்து மத அனுஷ்டானங்களும் அவைகளின் கல்வியும் குறைந்து வந்ததாலும் அந்த உணர்வும் அறிவும் ஆங்கிலக்கல்வி உடையவர்பால் மிகக் குன்றியும் அவைகளை பாதுகாத்தும் பரப்பியும் வளர்த்தும் தான் அனுஷ்டித்தும் வரவேண்டுமென்ற எண்ணமே இல்லாமலும் போய்விட்டது. இதனால் ஆஸ்திக ஜனங்களின் மனநிலைமையும் அவர்கள் நம்பிக்கைகள் அனுஷ்டானங்கள் இவைகளும் அவைகளில் அவர்களுக்குள்ள உரிமைகளும் எவ்வளவு கண்ணியத்துடன் மதிக்கப்பெற்றுப் பயத்துடனும் சிரத்தையுடனும் காப்பாற்றப்படவேண்டும் என்பது மறக்கப்பட்டது. இது காரணமாக, சமூஹச் சீர்திருத்தம் என்னும் பேரால் பல சட்டங்கள் இயற்றவும் ஆஸ்திக ஹிந்துக்களின் வாழ்கை முறைக்குப் பல தீங்கும் கேடும் சூழுத்தலைபட்டார்கள். இதிலிருந்து சிறிது சிறிதாக நம் நிலை குலைந்து ஆஸ்திக சமூகத்தாருக்கு அல்லல்கள் ஏற்பட்டன.

இவைகள் விஷயமாக ஆஸ்திகர்கள் உதாஸீனமாய் இருந்து வந்தபடியால் விவாகம் என்பது மதத்தில் சேர்ந்தல்ல என்றும், கேவலம் ஒரு சமூஹவாழ்கையின் கட்டுப்பாடுதான் என்றும், சொல்லிக்கொண்டு சாரதாசட்டம் ஆரம்பிக்கப்பட்டது அப்பொழுதுதான் முதல் முதல் ஆஸ்திக ஹிந்துக்களுக்கு, அரசாங்கத்தில் சலுகையுள்ளவர்கள் தங்கள் அவைதீகக்கொள்கைகளை நம் சமூகத்தில் புகுத்தி தார்மிக ஹிந்து ஸம்ஸ்கிருதிக்குத் தீங்கு இழைக்கக்கருதுகிறார்கள் என்னும் உணர்ச்சி உண்டாயிற்று. அதன் நிமித்தமாக மேலே சொன்ன கொள்கைகளை முக்கிய நோக்கமாகக் கொண்டு 1927-ம் ௵த்தில் ஸ்ரீ காசிக்ஷேத்திரத்தில் பல ஆஸ்திகப்பெரியோர்களின் பெருமுயற்சியாலும், மடாதிபதிகள் குருச்ரேஷ்டர்களுடைய அநுக்ரஹத்துடனும் பகவதகிருபையாலும் அகில இந்திய வர்ணாசிரம ஸ்வராஜ்யஸங்கம் ஸ்தாபிக்கப்பெற்றது அது முதல் அதன் நோக்கங்களை இந்தியாவிலும் பரப்பவும் தார்மிக ஹிந்துக்களின் ஸம்ஸ்கிருதியைக் காப்பாற்றவும் மாகாணச் சங்கங்களும் ஜில்லா சங்கங்களும் நகரச் சங்கங்களும் கிராமச் சங்கங்களும் கூட [illegible] முயற்சியாலும் பிர[illegible]த்தாலும் தர்ம ரக்ஷணம் அபிவிருத்[illegible]யும நடந்து வருகிறது. ஆனாலும் ராஜீயச்செல்வாக்கும் அரசியல் சலுகையும் பெற்ற மற்ற ஸ்தாபனங்களின் சிற்சி[illegible] கொள்கைகள் நம் தார்மிக மார்க்கத்திற்கு விருத்தமாகவே இருந்து கொண்டு வருவதால் அவைகளை ஊர்ஜிதப்படுத்தவும் அந்த முறையில் நம் சமூக வாழ்க்கை[illegible] மாற்றவும் அவர் செய்யும் பிரயத்தனங்[illegible]ம் விடாமல் நடந்து வருகின்றன.

இவ்வித மாறுபாடான இயக்கங்களில் ஒன்றான தீண்ட[illegible]ார் தொண்டு நமக்கு பெரிய விபரீதத்[illegible]விளைப்பதற்குக் காரணமாகி இந்த மதுரை நகரிலும் பக்கத்து ஊர்களிலும் உள்ள சில கோயில்களில் தீண்டாதாரைத் புகுத்தி அது சம்பந்தமாக அவசரச் சட்டமும் மற்றொரு சட்டமும் செய்யப்பட்டு நம் தேசத்திற்குக் கண்போன்ற ஸ்ரீ மீனாக்ஷி ஸந்நிதானமும் இன்னும் சில கோயில்களும் ஆஸ்திக ஹிந்துக்கள் வழிபடக்கூடாத நிலைமையில் இருக்கின்றன.

8—7—1939 லும் அதன் பிறகும் நடந்த இந்த ஆலயப்புகுதல் சம்பவங்கள் இந்திய தேசமுழுவதும் மிகுந்த பரப்பரப்பை உண்டாக்கி யிருக்கிறது. இந்தப்பாண்டிய நாட்டிலும் அதிலும் விசேஷமாக மதுரையிலும் மிகுந்த பரப்பரப்பை இது உண்டாக்கியதற்கு மதுரை டவுன் சங்கத்தில் 7000 வருக்கு மேல்பட்ட ஆஸ்தி ஸ்திரீகளும் புருஷர்களும் அங்கத்தினராகச் சேர்ந்திருப்பதே போதுமான சாக்ஷியாகும் அதுபோல் செட்டிநாடு ஜில்லா சபையும் அதைச்சேர்ந்த பல கிளைச்சங்களும் இன்னும் பாண்டியநாட்டிலும் பக்கத்துஜில்லாகளிலும் பல சங்கங்களும் இந்த ஒரு வருஷ காலத்திற்குள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதும் நம்மத உணர்ச்சியும் அதைக்காப்பாற்றுமுன் வரவேணும் என்ற தீர்மானமும் நம் ஜனங்களுக்குள் அதிகமாக அபிருத்தி ஆகி வருகிறது என்பதை உணர்த்துகிறது

உலக நிலை.

ஐரோப்பாவில் இப்போது நடந்துவரும் இந்த மஹா அதர்ம யுத்தமானது, நம்முடைய புராண இதிஹாஸங்களில் கூறப்பட்டுள்ள அதர்மயுத்தங்களை காட்டிலும் பலவிதத்திலும் கோரமானதும் கொடுமையானதுமாய் இருப்பதோடு, தெய்வநம்பிக்கையுள்ள யாரும் இதன்காரணத்தைச் சற்று நிதானித்துபார்த்தால் ஆத்ம லாபத்தையே முக்கிய புருஷார்த்தமாகக்கொண்டதும் பொருளும் இன்பமும் இந்த ஆத்ம லாபத்திற்கு சாதனமாயிருக்கும் அளவில் மட்டும் தான் வேண்டத்தக்கவை என்பதும் வாழ்க்கையின் நலம் எக்காலத்திலும் எல்லாவிடத்திலும் யார்பாலும் அன்பு செலுத்துவது ஒன்றினாலேயே உயர்வடையும் என்பதும் ஆகிய இத்தகைய நம்ஹிந்து தர்மத்தின் அடிப்படையானவற்றுள் எளிதான சில தர்மங்களைக்கூட மேல்நாட்டார் கற்கும் கல்யியில் ஒரு,முக்கியமாக அவர்களுக்குப் புகட்டப்பெறாத குறைவினால் ஏற்பட்டதென்பது நன்றாய் விளங்கும். மேல்நாட்டுக் கல்விச்சாலைகளில் அந்தநாட்டாருக்குக் கற்பிக்கப்பட்ட கல்வியால் இப்போது அங்கு விளைந்திருக்கும் விபரீதத்தையும் ஒப்[illegible]ட்டுப்பார்க்கில், அவர்கள் ஒருவர்க்கொருவர் இவ்வுலக வாழ்க்கையின் நலத்தை மட்டும் அழித்துக் கொண்டிருக்க நம் வைதிக மத விரோதிகளோவெனில் அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் இகத்திலும் பரத்திலும் உள்ள எல்லா வாழ்வையும் மூல நாசம் செய்யத்தொடங்கி இருக்கிறார்கள். [illegible]னால் அவர்களுக்கு எவ்வித ஆதிக்கமும ஜனப்பிரதிநிதி நிலையும் ஏற்படாமல் நாம் ஒன்றுகூடி காப்பற்றினால்தான் நமமதமும் அதை ஒட்டின வாழ்க்கை நலமும் நமக்கு ஸித்திக்கும்.

இதற்கு நாம் உடனே மிகவிரிவான நிர்மாணதிட்டத்தை ஏற்படுத்தி அகில இந்தியாவிலும் ஊர் ஊராகவும் கிராமம் கிராமமாகவும் கிளைச்சங்கங்களை ஏற்படுத்தவும் ஒவ்வொரு ஊரிலும் உள்ள மிகப் பெரும்பாலரான ஆஸ்திக ஹிந்துக்கள் அதில் சேரவும் வேண்டும். இதற்கு சரீரத்தால் பாடுடவும் தங்களாலியன்ற பொருளுதவி செய்யவும் வல்லர்கள் எல்லாம் தாமாக மேமுன்வந்து தங்கள் தங்களால் இயன்ற உதவி செய்ய வேண்டும். நம்முடைய மதமும் அதை ஒட்டின ஆசார அனுஷ்டானங்களும் ஆபத்துக்களுக்கு உள்ளாகியிருக்கும் நிலைமையில் அவைகளில் பற்றுள்ள ஆஸ்திகர்களெல்லாம் அது தங்கள் தங்களுக்கே நேர்ந்துள்ள பெரிய ஆபத்து என்பதை உணர்ந்து அதைநீக்கித்தர்மத்தைக் காப்பாற்றக் விரைந்து பாடுபடவேண்டும் என்பது சொல்லாமலேவிளங்கும். இவ்விதத்தொண்டில் ஈடுபட எண்ணுவோருக்கெல்லாம் எடுத்துக்காட்டாக ஒருவரைக் குறிப்பிடக்கூடுமென்றால் நம் தலைவர் ஸ்ரீமான் ராவ்சாகிப் என் நடேசய்யர் அவர்களே அதற்குறியராவர். சென்ற சுமார் 25 வருஷங்களாக மதுரைமாநகரில் வேதசாஸ்திர விசாரங்களும் பெரிய உபந்யாஸங்களும் தத்துவ சாஸ்திர ப்ரவசனங்களும் இடை விடாது தாம் இருக்கும் இடமெல்லாம்நடத்திவைத்து அதன்மூலம் சாஸ்திர ஞானத்தை இம்மதுரையில் உள்ள எல்லா ஜனங்கள் மனதிலும் திடப்படுத்தப் பேருதவி புரிந்தும் 1927ம் வருஷத்தில் சாரதாசட்டம் மசோதாவாக வந்தகாலத்தில்

(தொடர்ச்சி 8 பக்கம் பார்க்க)

ஷஷ்டியப்த பூர்த்தி வைபவம்

மாம்பலம்

பிரும்மஸ்ரீ கடலங்குடி நடேச சாஸ்திரிகள் அவர்களின் ஷஷ்டியப்த பூர்த்தி வைபவமானது 1—10—1940 ல் வைதிகலௌகிக பிரமுகர்களால் மிகவும் உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது. பிர்மஸ்ரீ சாஸ்திரிகள் அவர்கள் மாம்பலத்திலுள்ள தமது பங்களாவில் வைதிகமான சாந்தி, ஹோமம் முதலியவைகளை த்விவேதி, திருவிடைமருதூர் விச்வேச்ர கனபாடிகளுடைய சிஷ்யர்களையும் மற்றும் பல வைதிகோத்தமர்களையும் வைத்துக்கொண்டு சிறப்பாக நடத்தினார்கள், அச்சமயம் ஸ்ரீமான்களான 'ஹிந்து' ஆசிரியர் கே. கோபாலன் ரிடயர்ட் டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ, கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரிகள், எஸ். ஸத்தியமூர்த்தி, மைலாப்பூர் ஸம்ஸ்கிருத காலேஜ் பிரின்ஸ்பால், டி. வி. ராமச்சந்திர தீக்ஷிதர், ஆர். நாராயணஸ்வாமி அய்யர் வைதிக தர்ம ஸம்ரக்ஷக, பிரவசன துரீண சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதர், தர்மரக்ஷாமணி கே. பாலசுப்பிரமணிய அய்யர், திருப்புகழ் மணி டி. எம். கிருஷ்ணஸ்வாமி அய்யர், டாக்டர் ஆதிசேஷய்யர் முதலிய பிரமுகர்களுமாக சுமார் 500 ஜனங்கள் வந்திருந்தனர்.

பிறகு சாஸ்திரிகளின் ஷஷ்டி வைபவத்தைக் கொண்டாடுவதற்காக மாலை 5 மணிக்கு மாம்பலம் கோவாபரேடிவ் சொஸைடி ஹாலில் மகாகனம் ஹைகோர்ட் ஜட்ஜ் கே. எஸ். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடை பெற்றது. அச்சமயம மகாகனம் ஹைகோர்ட் ஜட்ஜ் பதஞ்சலி சாஸ்திரிகள், ஸி. ராஜகோபாலாசாரியார், தண்டலம் டி. எஸ். ராமஸ்வாமி அய்யர், நவசக்தி ஆசிரியர் கல்யாணசந்திர முதலியார். திவான்பஹதூர் கோபதி நாராயணஸ்வாமி செட்டியார், டிஸ்ட்ரிக்ட் எஜுகேஷனல் ஆபீஸர் ஸச்சிதானந்தம் பிள்ளை, அட்வகேட் ஜனரல் அல்லாடி கிருஷ்ணஸ்வாமி அய்யர், மயிலாப்பூர் ஸம்ஸ்கிருத காலேஜ் மீமாம்ஸா பிரபசர் பாலசுப்பிரமணிய சாஸ்திரிகள் முதலியவர்களும் காலையில் வந்திருந்த பிரமுகர்களுமாக சுமார் 1000 பேர் விஜயம் செய்திருந்தனர்.

முதலில் சாஸ்திரிகளின் புத்திரியும் 6 வயதுள்ளவளுமான சரஸ்வதியால் ஸம்ஸ்கிருதத்தில் கடவுள் வாழ்த்து வெகு இனிமையாக பாடப் பெற்றது. பிறகு ஸர். பி. எஸ். சிவஸ்வாமி அய்யர். ஸர். S. வரதாசாரியார் ரிடயர்ட் டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ் டி. சுந்திரமய்யர் முதலியவர்களிடமிருந்து வந்திருந்த அபிநந்தன பத்திரங்கள் வாசிக்கப்பட்டன.

ஸ்ரீசாஸ்திரிகள் அவர்களை 'அபிநவவியாசர், என்று அழைக்கவேண்டும் என்று ஸர். P. S. சிவஸ்வாமி அய்யர் எழுதியிருந்ததை சபையோர்கள் கரகோஷத்துடன் அங்கீகரித்தனர். திவான் பஹதூர் கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரிகள் அவர்கள் சாஸ்திரிகளை "குலபதி" என்று சொன்னதும் அங்கீகரிக்கப்பட்டது. பிறகு சாஸ்திரிகளிடம் முறைப்படி வேதாந்தபாடம் கேட்ட சிஷ்யர்களும் நண்பர்களும் அழகாக ஸம்ஸ்கிருதத்தில் ஒரு உபசார பத்திரம் படித்துக்கொடுத்தனர். பிறகு மாம்பலம் ராமகிருஷ்ண மிஷன் ஹைஸ்கூல்பண்டிதசமாஜத்தார் ,தங்கள் சமாஜத்தின் தீர்மானப்படி 'அபினவ சுகபிரம்மம்' என்ற பிருதத்தையும் ஓர் உபசாரப் பத்திரத்தையும் கொடுத்து சிறந்த பூமாலைகள் சாஸ்திரிகளுக்கு அணிவித்து உபசரித்தபோது சபையோர் செய்த ஆரவாரமும் கரகோஷமும் வானைப்பிளந்தன. பிறகு நவசக்தி ஆசிரியர் திரு, வி. கல்யாணசுந்தர முதலியார் அவர்கள் தமிழன்னையின் கழுத்திலணிந்த முத்துமாலையோ என்றெண்ணத்தக்க தேனொழுகும் தமிழ் மொழியில் ஓர் உபசாரபத்திரத்தை படித்துக்கொடுத்து சுமார் அரைமணி நேரம் சாஸ்திரிகளையும் அவர்செய்த நற்காரியங்களையும் புகழ்ந்து பேசினதை சபையிலுள்ளார் மெச்சிக்கொண்டாடினர்.

அச்சமயம் K. S. ராமஸ்வாமி சாஸ்திரிகளவாகளும் ,K. [illegible]லசுப்பிரமணிய அய்யர் அவர்களும், [illegible] ராஜகோபாலாசாரியார் அவர்களும், தேவீ பக்த சிகாமணிகளான தண்டலம் ராமஸ்வாமி அய்யர் அவர்களும், சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதர் அவரகளும், பிரும்மஸ்ரீ சாஸ்திரிகளையும், அவரது நற்காரியங்களையும் கொண்டாடி அவரவரும் பத்துப்பத்து நிமிஷங்கள் பேசினபோது சபையோர் தமக்கேற்பட்ட சந்தோஷத்தை கரகோஷத்தாலும், ஆரவாரத்தாலும் வெளியிட்டது எழுதத்தரமன்று. பிறகு தர்மரக்ஷரமணி ஸ்ரீ. K. பால சுப்பிரமணிய அய்யரவர்கள். தமக்கு வித்வான்களிடத்தும் சாஸ்திரங்களிடத்துமுள்ள பேரன்பே உருக்கொண்டதோ என்றெண்ணும்படியான மிக்கவிலையுயர்ந்த ஜரிகை சால்வை யொன்றை சாஸ்திரிகளுக்கு அக்கிராசனர்மூலம் சாத்தி உபசரித்த பொழுது சபையோர் மட்டில்லாமகிழ்ச்சி அடைந்தனர். முடிவில் அக்கிராசனர் அவர்கள் பிரும்மஸ்ரீ சாஸ்திரிகள் செய்த லோகோபகாரமான காரியத்தைப்புகழ்ந்து கொண்டாடி வேதத்தில் சொல்லிய நூறு வயது வரை திடகாத்திரத்துடன் ஜீவித்திருந்து மேலும் ஜனோபகாரமான பற்பல நற்காரியங்களை செய்து வரவேண்டும் எனக் கடவுளை பிரார்த்திப்பதாகக்கூறி முடித்தனர்.

பிறகு அக்ராசனர் அவர்களால் பொது ஜனங்களிடமிருந்து கிடைத்த 1266-8-0 கொண்ட பணமுடிப்பும் பல பக்தர்களால் அளிக்கப்பட்ட வெள்ளி பாத்திரங்களும் சாஸ்திரிகளவர்களிடம் கொடுக்கப்பட்டன பிறகு அங்கு வந்தவர்களுக்கு சந்தனம், தேங்காய், பழம், தாம்பூலம் கொடுக்கப்பட்டு வைபவம் இனிது நிறைவேறியது:

அவரவரும் சென்னையிலோ, பிறஇடத்திலோ ஸம்ஸ்கிருத பண்டிதருக்கு இம்மாதிரியானவைபவம் இது காறும் நடந்ததில்லை என்று கூறிக்கொண்டு வீடு சென்றனர்.

கே. ராஜகோபால சாஸ்திரி

தீண்டாதவர் ப்ரவேசித்த கோயிலில் பூஜை செய்த அர்சகருக்குத் தீட்டு

ஆழ்வார் திருநகரில் தகராறு

ஸம்ப்ரோக்ஷணம் நடத்தப்பட்டது.

(நமது விசேஷ நிருபர்)

திருவாங்கூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த ஏழகரம் பெருமாள் கோயிலில் ஆழ்வார் திருநகரி ஸ்ரீ ஆதி நாதர் ஆழ்வார் தேவஸ்தான அர்சகர் தேவராஜையங்கார் சென்று, சமீபத்தில் ஓர் உத்ஸவதுவஜாரோகணம் செய்து பூஜை முதலானதுகளை நடத்திவந்திருப்பதுடன் அது விஷயம் அறிவிக்காமல் ஆழ்வார் திருநகரி கோயிலிலும் தமது அர்சகர் முறைப்படி மேற்கொண்டு பூஜை முதலான கைங்கர்யங்களை செய்து வந்திருக்கிறார். 23—9—40ல் அர்சகர் ஜகன்னாதய்யங்கார் என்பவர் கோயில் எக்ஸிகூவ் ஆபீஸரிடம் ஓர் மனுக்கொடுத்தார். அதில் மேற்படி தேவராஜய்யங்கார் தீண்டாதார் பிரவேசம் செய்த திருவாங்கூர் சமஸ்தான ஆலயத்தில் சென்று உத்ஸவம் நடத்தி வந்திருப்பதால் சாஸ்திரப்படி அவர் பிராயசித்தம் செய்துகொள்ள வேண்டுமென்றும் ஒன்றும் செய்து கொள்ளாமல் ஆழ்வார் திருநகர் ஆலயத்திலும் பூஜை செய்திருப்பதால் ஸ்ரீ ஆதிநாதர் ஆழ்வார் தேவஸ்தானத்திலும் சம்புரோக்ஷணம் செய்ய வேண்டுமென்றும் குறிப்பிட்டிருந்தது.

அதன்மேல் எக்ஸிகூடிவ் ஆபீஸர் திருவாங்கூர் கோயிலுக்கு போய்வந்த அர்சகரை விசாரித்ததில் அவர்தாம் ஏழகரம் ஆலயத்தில் உத்சவ துவாஜாரோகணம் செய்து வந்தது வாத்ஸவமென்றும் ஆனால் அந்தக் கோயிலில் தீண்டாதார் ப்ரவேசம் நடக்கவில்லையென்றும் அப்படி நடந்திருந்தாலும் உத்ஸவத்துக்கு முதல் நாள் சாந்தி நடைபெறுவது வழக்கமென்றும் அதுவே போதுமானதென்றும் ஸ்டேட்மெண்ட் கொடுத்திருப்பதாய் தெரிகிறது. அதன் பின் எக்ஸிகூடிவ் ஆபீஸர் ஸ்ரீமான் ஆர். குருசாமி நாயுடு கோயிலில் உள் துரைமானேஜரை இது விஷயமாய் திருவாங்கூர் ஸ்டேட் ஏழகரம் ஆலயம் சென்று தீண்டாதார் ப்ரவேசம் நடந்து வருகிறதா என்பதையும் மற்றும் விஷயங்களையும் கவனித்து விசாரணை செய்துவர அனுப்பி வைத்தார். சனாதன தர்ம சபா நிர்வாகக் கமிட்டி மெம்பர் சொகுசு தேவராஜையங்காரும் கூட சென்றிருந்தார் 27—9—40ல் உள்துரை மானேஜர் ஸ்ரீமான் எஸ். ராகவய்யங்கார் திரும்பிவந்து எக்ஸிகூடில்.ஆபீஸரிடம் ரிபோர்ட் கொடுப்பதாயும் ஏளகரம் ஸ்ரீ வெங்கடேசப் பெருமாள் கோயிலில் தற்போதும் தீண்டாதார் ப்ரவேசம் செய்துவருகிறதாயும், அர்சகர் வை. தேவராஜையங்கார் ஸ்டேட்மெண்ட் ஒப்புக்கொள்ளத் தக்கதல்ல வெனவும் அதில் குறிப்பிட்டிருப்பதாயும் சொல்லப்பட்டிருக்கிறது.

28—9—40 ல் பக்த ஜனங்கள் பலர் கையொப்பமிட்டு ஹரிஜன ஆலயப்ரவேசம் நடைபெற்ற கோயிலில் இவ்வூர் அர்சகர் பூஜை செய்ததன் மூலம் அவர் ப்ராயச்சித்தியாகிறாரென்றும் ஆலயத்திலும் சம்புரோக்ஷணம் செய்யவேண்டிய தவசியமென்றும் ஆழ்வார்திருநகரி ஆலய நிர்வாஹ ஆபீஸாரிடம் எழுத்து மூலமும் நேரிலும் தெரிவித்துக்கொண்டனர். 29—9—40 ஞாயிறன்று காலை சனாதன தர்மசபா செகரெட்ரியால் சென்னைரிலிஜியஸ் எண்டோமெண்ட் போர்டுக்கு ஓர் தந்தி கொடுக்கப்பட்டது.

கோயில் பஹிஷ்காரம்.

திருநகரி ஸ்ரீ எம். பெருமானார் ஜீயர் ஸ்வாமி தம்து நிர்வாகத்திலுள்ள உடையவர் சன்னதிக்கு ஸ்ரீ ஆதி நாதர் ஆழ்வார் கோயிலிருந்து ஏற்பட்ட ப்ரஸாத சுதந்திரத்தை சம்புரோக்ஷணம் நடைபெறாத காரணமாய் வேண்டாமென சொல்லிவிட்டார். சனாதனத்தலைவர் ஸ்ரீமத் ஆத்தான் வடக்குத் திருமாளிகை ஆதீனம் ஸ்வாமிகள் ஸ்ரீ ஆதிநாதர் சன்னதியில் நடத்திவந்த தமது திருமாளிகை நித்திய அர்ச்சனையை ஸ்ரீ வேங்கடேசப் பெருமாள் கோயிலில் நடத்திவந்ததாய்த் தெரிகிறது, மற்றும் பக்தர்களும் சனாதனிகளும் கோயிலுக்கு செல்வதை நிறுத்திக்கொண்டு விட்டனர். நகரெங்கும் மிகுந்த பரப்பரப்புடன் இதே பேச்சாயிருந்து வந்தது.

கடைசியாக 28—9—40 ஞாயிறன்று மதியம் ஸ்ரீ ஆதிநாதர் ஆழ்வார் தேவஸ்தானத்தில்ஸம்புரோக்ஷணம் நடைபெற்றது.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
விக்ரம-௵ புரட்டாசி-௴ 25௳

காந்திஜீயின் பேச்சுரிமைக் கோரிக்கை

ஸ்ரீமான் காந்தி வைஸ்ராயுடன் பேசிய போது நடந்த வேறு சில விஷயங்களையும் ஒரு அறிக்கை மூலம் வெளியிட்டிருக்கிறார். அதில் அவர் தற்போது ஸ்வதந்திர பிரச்னை, குடியேற்ற நாடு உரிமை, தேசிய ஸர்க்கார் அமைப்பு முதலிய விஷயங்கள் முக்யமல்லவென்றும், ஒவ்வொரு மனிதனும் தனது மனதில் உள்ளதை அப்படியே வெளியிட்டு கூறக்கூடிய பேச்சுரிமை தான் எல்லாவற்றையும்விட முக்யமானதென்றும் கூறியிருக்கிறார்.

அதாவது இந்த யுத்த நெருக்கடி காலத்தில் யுத்தத்திற்கு எதிராக பிரசாரம் செய்வதின் மூலம் மேற்படி பேச்சுரிமையை ஸ்தாபித்துக்கொள்ள வேண்டுமென்பது அவரது பிடிவாதம். இந்தப் பிடிவாதத்தில் ராஜநீதி வாஸனையோ, தர்ம மூலமான கொள்கையோ, அஹிம்ஸா தத்துவமோ ஒன்றும் அடங்கியிருக்கவில்லை என்று தேசமெங்கும் விவேகிகள் கண்டிக்க முற்பட்டிருக்கிறார்கள். காங்கிரஸ்காரர்களிலும் கூடப் பலருக்கு, இந்த அனுபவ ஸாத்யமற்ற கோரிக்கையைப்பற்றி அதிருப்தியிருந்த போதிலும் வீண் கட்டுப்பாட்டிற்காகவே அவர்கள் வாய்திறக்க முடியாமலிருக்கிறது.

மனிதனுடைய எந்த உரிமையும் மேலானது தான். அதற்கு பங்கம் ஏற்படக்கூடாதுதான். அதுபோல் பேச்சுரிமையும் அவச்யமானதே. ஆனால் ராஜநீதி முறைப்படியோ, தர்ம சாஸ்திர நீதிப்படியோ பார்த்தால் எந்தஉரிமையும் ஒரு வறையறைக்குட்பட்டுத்தானிருக்க வேண்டுமென்பது ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம். மனிதனுக்குப் பேச்சுரிமையுண்டென்றாலும், தர்ம விஷயமாகவோ, ராஜநீதி விஷயமாகவோ எவனும் தன் மனதில் தோன்றியதையெல்லாம் பேசி ஸமூஹத்தை கலக்கமுறச் செய்வதை சாஸ்திரமோ, ராஜதர்மமோ எங்கும் அனுமதிக்கவில்லை. அப்படி உரிமை கொடுத்தால் எந்த ராஜ்யமும், எந்ததர்மமும் அமைதியுடன் நிலைத்து வாழமுடியாது. ஆதலால் பேச்சுரிமை நியாயமாயினும் சிற்சில விஷயங்களைப்பற்றி யாவரும் பேசவிடுவது பெருத்த அபாயமாகி விடுமாகையால் அந்த உரிமை ஒருவறையறைக்குள்ளப்பட்டே இருந்து தீரவேண்டும்.

ஸாதாரண காலத்திலேயே இந்த நியாயமிருக்கையில் யுத்த நெருக்கடி போன்ற அபாய ஸந்தர்ப்பங்களில் அவனவன் மனம் போனபடியெல்லாம் பேசவிட்டால் கவர்ன்மெண்டின்கதி என்னவாகும்? இன்றுள்ள நிலைமையில் இந்தியாவின் அதிபதியாக விளங்குபவர் நமது ராஜசக்ரவர்த்தியே யாவார். அவருடைய கவர்மெண்டு தான் இன்று நம்மை ஆண்டு வருகிறது. அதன் சட்ட திட்டங்களுக்கு அடங்கித் தான் காந்திஜியும், காங்கிரஸ்காரரும் வாழ்ந்து வருகிறார்கள். ஸ்வந்திரம் வேண்டுமென்று காங்கிரஸானது பிரிட்டனிடமே கேழ்க்க வேண்டியிருக்கிறது. இந்தியா ஸ்வதந்திர நாடாக ஆகிவிட்டதென்று காந்திஜியோ, காங்கிரஸோ விளம்பரப் படுத்திவிடமுடியுமா? பேச்சு ஸ்வதந்திரம் வேண்டுமென்று வைஸ்ராயிடம் தானே காந்திஜியும் கேட்க வேண்டி யிருக்கிறது? இப்படியெல்லாமிருக்கையில் இன்று நடைபெறும் ஆக்ஷிமுறை நல்லதோ கெட்டதோ எதுவாயிருப்பினும், யுத்தமாகிற இந்த ஆபத்காலத்தில் அந்த ஸர்க்காரைக் காப்பாற்ற முனைந்து நிற்பதே பிரஜைகளின் புனிதமான தர்மமாகும். அப்படியிருக்க அதற்கு ஸங்கடம் உண்டு பண்ணிவிட முயற்சிப்பது ராஜ்யநீதி தர்மத்திற்கே முற்றிலும் விரோதமானது. அரசன் ஸங்கடத்தில் இருக்கும்போது பிரஜைகள் எல்லாவித த்யாகங்களையும் செய்து ராஜ்யத்தைக் காப்பாற்ற முன்வரவேண்டுமென்றே தர்மகிரந்தங்களும் கூறுகின்றன.

ஆகவே இந்த நெருக்கடி ஸந்தர்ப்பத்தில் பிரஜா உரிமை என்ற பெயரால் யுத்த விரோதப்பிரசாரம் நடத்துவது தர்மமோ, நீதியோ ஆகாது. மேலும் இதில் காந்திஜீ முன்பின் விரோதமாக நடப்பது தெளிவாயிருக்கிறபடியால்,வெறும் பிடிவாதத்திற்காகவே அவர் இப்போது பேச்சு ஸ்வதந்திர உரிமையை வற்புறுத்துகிறாரேயல்லது வேறில்லையென்பது விளங்குகிறது. யுத்த ஆரம்பித்த காலத்தில் தீவ்ரவாதிகள் பலர் யுத்தத்தையும், பிரிட்டனையும் தாக்கிப்பேசியபோது காந்திஜி என்ன சொன்னார்? பிரிட்டன் பெரிய ஆபத்தில் சிக்கிக்கொண்டிருக்கும் இச்சமயத்தில் தாம் எவ்வித நிபந்தனையன்றியும் அதற்கு எல்லாவித உதவியும் செய்யத்தயாராக இருப்பதாகக் கூறினாரே? அப்போது இந்த பேச்சு உரிமை விஷயத்தைக் காந்திஜி மறந்து விட்டாரா? அன்று பூர்ண உதவி செய்வதாகச் சொல்லிவிட்டு இன்று விபரீதபிரசாரம் செய்ய அனுமதி கோருவது என்ன நேர்மை?

சட்டதிட்டங்களுக்கு உட்பட்டுஒழுங்குமுறையுடன் நடக்கும் எந்த கவர்ன்மெண்டும் காந்திஜியின் விசித்ரக்கொள்கைக்கு அனுமதி கொடுக்க நியாயமில்லை. இன்று காந்திஜியே வைஸ்ராயாக இருந்தால் இவ்வாறு அனுமதிக்க இணங்குவாரா? காங்கிரஸ் மந்திரிகள் ஆக்ஷி நடத்திய காலத்தில் பிரஜைகளின் உரிமைகளை பழக்கவழக்கங்களின்படி பாது காத்துக்கொடுப்பதில் காட்டிய விபரீத சிரத்தையை அறியாதாருண்டோ? காங்கிரஸ் ஸ்தாபனத்திற்குள்ளேயே இத்தகைய பேச்சுரிமை கொடுபடுமா? ஒரு சட்ட திட்டத்திற்குட்பட்டு அமைக்கப்பட்டுள்ள அந்த ஸ்தாபனத்தை, அதன் மெம்பர்களே எதிர்த்துப் பேசி குலைத்து விடும்படியான பேச்சு ஸ்வதந்திரம் கொடுத்தால் காங்கிரஸ் உயிருடனிருக்குமா? காங்கிரஸின் வேலைதிட்டங்களைக் கண்டித்து காங்கிரஸ்காரரே பிரசாரம் செய்யும்படி பேச்சுரிமையை காங்கிரஸ் அனுமதிக்குமா? அவர்கள் மீது ஒழுங்கு மீறியதற்காக நடவடிக்கைஎடுக்கபடவில்லையா?

காந்திஜீ வைஸ்ராயிடம் பேச்சுரிமை கொடுக்கும்படி கேட்பது நியாயமானால், எம். என். ராய், நரிமன் போன்றவர்கள் தங்கள் பேச்சுரிமையை மதிக்கும்படி காந்திஜீயைக் கேட்டால் அது தவறா? கொடுப்பரா? கொடுத்திருக்கிறாரா? ஆகையால் உரிமையாயினும் அது எங்கும், யாவருக்கும் ஒரு வறையறைக்குட்பட்டதேயாகும்.

தவிரவும் காந்திஜீ யுத்த எதிர் பிரசாரம் செய்யக் கோருவது அவரது அஹிம்ஸைக் கொள்கைக்கும் ஏற்றதாயில்லை. ஒருவன் உயிருக்குத்துடித்துக்கொண்டிருக்கும் காலத்தில் அவனுக்கு ஒருவித உதவியும் செய்யக்கூடாதென்று பிரசாரம் செய்வது அஹிம்ஸையில் சேர்ந்ததா? காந்தீய அஹிம்ஸையின் விசித்ரமான போக்கும், அதற்கு அவர் ஸமயோசிதமாக கற்பிக்கும் வியாக்யானங்களும் விவேகிகளால் கூட அறியமுடியாத குழப்பமாயிருக்கின்றன. இத்தகைய நிலையற்ற, உருவற்ற அபத்தக் கொள்கைகளை வைத்துக்கொண்டு காந்திஜி இந்திய ராஜீய நன்மைகளைக் கெடுத்து வருவதற்கு தேசத்தார் இனியும் இடமளிக்கப்போகிறார்களா? இன்று யுத்த நெருக்கடியுள்ள நிலைமையில் இந்தியாவிலும் யுத்த அபாயம் தோன்றக்கூடுமென்று ராஜ தந்திரிகள் பலர் பத்திரிகைகளில் வெளியிட்டு வருகிறார்கள். அப்படியேற்பட்டால் காந்திஜீயின் அஹிம்ஸையால் என்ன செய்யமுடியும்? அத்தகைய சந்தர்ப்பத்தில் காந்திஜிகூட பிரிட்டனையே நம்பி பிழைக்கவேண்டியிருக்கிறது. இதையெல்லாம் மறந்து காந்திஜி தேசத்தில் அஸந்தர்ப்பமாக குழப்பம் விளைவிப்பதை எவரும் ஏற்கமாட்டார்.

மதிப்புரை

ஸ்ரீ துர்க்காஸ்தோத்திரமும் நாமாவளியும்.

இது மஹாபாரதம் விராட பர்வத்திலுள்ளது. இதில் தேவநாகரி எழுத்தில் மூலமும் நாமாவளியும் அமைக்கப்பட்டிருக்கிறது. யாவரும் எளிதில் படித்துப் பயனை அடையும் முறையில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஷை பாராயணம் அர்ச்சனை செய்பவர்களுக்கு மிகவும் அநுகூலமாயிருக்கும். மஹாபாரதம் 18 பர்வங்களில் ஐஹிக சுகமடைய பாராயணம் செய்யத்தகுந்தது விராடபர்வமாகும். அதில் துர்க்காதேவியின் அருளையடைய துர்கா த்ரிசதீ பாராயணம் ஜபஹோமங்களைக்காட்டிலும் ஷை ஸ்தோத்திர பாராயணம் தேவியின் அர்ச்சனை மூலம் ஸ்ரீ துர்காதேவியின் அனுக்ரஹமடைவது ஒரு வழியாகும். இதற்கு இந்நூல் இன்றியமையாததாகும். நாமாவளியும் சேர்த்து ஒரே புத்தகரூபமாக வெளியிடப்பட்டிருக்கிறது. தமிழ், கிரந்தம் தேவநாகரியிலும்கிடைக்கும். ஆஸ்திகர்களிடம் இருக்க வேண்டியதில் இதுவும் ஒன்று. இதன் தமிழ் 0—1—0. நாகரம் விலை 0—1—6 தபால் செலவு தனி. வேண்டியவர்கள் ஜனார்தன பிரஸ்ஸில் பெறலாம்.

மேன்மை தங்கிய கவர்னரவர்களின் யுத்தநிதி

தஞ்சை ஜில்லா அதிர்ஷ்ட பரிசுச்சீட்டு 8-12-40௳ தஞ்சைக் கலெக்டர் ஆபிசில் நடைபெறும். டிக்கட் ஒன்று எட்டு அணா. மொத்தம் 2000 பரிசுகள். பரிசுகள் விபரம் — புதிய மோட்டார்கார், புதிய ரேடியோ வகையறாக்கள். விவரங்கள் டிக்கட்டின் பின்புறம் காண்க. டிக்கட்டுகள் டிஸ்டிரிகட் டிவிஷனல் யுத்தக்கமிட்டிகளில் கிடைக்கும்.

பிரசிடென்ட் ரேபிள் கமிட்டி.

வாரக் குறிப்புகள்

(ஸ்ரீவத்ஸ வே. ஸோ. சர்மா)

ஊருக்கொருவர் போதும் !! சென்னையில் ஓர் வைத்யரது குமாரி கிருஸ்தவப்பள்ளியில் படிக்கிருள். கிருஸ்தவ மதாபிமானியான துரைசாணி அக்குழந்தை நெற்றி குங்குமத்தை அழிக்கசென்ருள். அது அமங்கலிதான் அழிப்பாள் நானழிக்க கூடாதென்று கூற, பலாத்காரமாக துரைசாணி அழித்துவிட்டார். நெற்றிக்கே இடாத டாக்டர்கல்வி அதிகாரிகளுக்கெழுதி இனி அப்படி செய்யாதபடியும் அவள் மன்னிப்புகேட்கும்படியும் செய்தார். இத்தகையோர்-

ஸ்ரீ சங்கரமட நவராத்திரி !! சென்னை ஸ்ரீ சங்கரமடத்தில் வேதபாராயணம் அபிஷேகம் நவாவரண பூஜை மாலையில் ஸ்ரீ ஸோமதேவ சர்மாவின் லலிதோ பாக்யான பிரஸங்கம், அலங்கார தீபம் முதலியன நடைபெறுகின்றன. ஸ்ரீமான் கிருஷ்ண மூர்த்தி சாஸ்திரிகள் தூண்டுதலால் ஸ்ரீ சர்மா, சாஸ்திரிகள், மடம் உத்யோகஸ்தர் ஸ்ரீ சிவராமய்யர் முதலியவர்கள் ஒவ்வோர் திந உபயம் செய்கின்றனர்.

ரஷ்யாவுக்கும் பிளிப்பா ? ஜர்மனியுடன் உறவு கொண்டாடிய ருஷ்யாவும் ஜர்மன் எல்லைக்கருகில் படையை கொண்டுவைத்திருக்கிறது. அதன் நோக்கம் யாதோ?

மூன்றும் ஒன்று சேர்ந்தது !! ஜப்பான் இத்தாலி ஜர்மன் இவை ஒன்று சேர்ந்து ஏதோ ரஹஸ்யமாக சதியாலோசனை செய்கின்றன. இப்போது கூட அமரிக்கா உபேக்ஷையாயிருந்தால் எல்லோருக்கும் கஷ்டம்.

பரஸ்பர அவநம்பிக்கை !! ஹிட்லரும் முஸோலினியும் மூன்று மணி ஏகாந்தமாக பேசினர். முடிவு இருவகையாக ஊகிக்கப்படுகிறது. பிரஞ்சை கிளப்பி பிரட்டனுடன் பலமாக போர்த் துவக்குவது, கிழக்கு ஆபிரிக்காவில் இருவரும் பெரும் போர்த் துவக்குவது. ஆனல் பரஸ்பரம் அவநம்பிக்கைமிக பலமாயிருப்பதாகத் தெரிகிறது.

அதர்மம் தவிர பயனுண்டோ ? மாணவர்கள் ஊர் ஊராக அலைந்து வருவது கல்வியில் ஓர் பாகமாக கருதப்பட்டு பலர் பல விடங்களில் சுற்றுகின்றனர். தேச ஸஞ்சாரத்திற்குப் பயனுண்டு என்ருலும் இவர்கள் பிரயாணம் அதை அளிக்காததுடன், சாப்பாடு பலஹாரம் அதுவும் ஸகலஜாதியும் ஒன்ருக உண்பது என்பதோடு நிற்பது வருந்ததக்கது.

காட்டு மிரண்டியாக்குகிறது!! நவீநநாகரீகக் கல்வி என ஸர். ராதாகிருஷ்ணன் காசி ஸர்வகலாசாலையில் நம் நாட்டு கல்விக்காக கட்டப்பட்ட கட்டடத்தைக் திறக்கும் போது சொன்னர். சுயநலப்புலிகளாய் பிறரைசிறிது கூட மதியாமல் முன்னோரையும் ஸதாசாரத்தையும் நிந்திக்கும் மாணவருக்கு அவர் சொன்னது போதாது.

இரண்டும் போற்றப்படுகிறது !! ம. ம. ஸ்ரீ அநந்தகிருஷ்ண சாஸ்திரிகள் மூன்று மதத்திற்கும் பொதுவான விவாஹ விஷயத்தில் அத்வைத ஸபை இதர மத பண்டிதர்களையுங் கலக்கவேண்டும் என்றதும், சேங்காலிபுரம் ஸ்ரீ பஞ்சாபகேச அய்யர்வாள் சிஷ்டாசாரத்தை ப்ரமாணமாகக் கொள்ளாவிடில் பல அசர்த்தங்களுக்கு இடமளிக்கும் என்றதும் ஆஸ்திகர்களால் மிகமிக கொண்டாடப்படுகிறது.

ஹிந்துமஹா ஸபையும் ஸனுதநிகளும்

(கே. எம். பாலசுப்பிரமணிய அய்யர்.)

ஆர்யதர்மம் (26–9–40) பத்திரிகையில் ஹிந்து மகாசபையும் சநாதநிகளும் என்ற தலையின் கீழ் எழுதப்பட்ட ஒரு சனுதநியின் கட்டுரையைக் கண்டோம். அதில் மதுரையில் கூடிய வர்ணுசிரம ஸ்வராஜ்ய சங்கத்தார் ஹிந்து மஹாசபையைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றியதை ஒரு முறை ஆலோசிக்க வேண்டும் என்று எழுதிருக்கிருர். இதை சற்று ஆராய்வோம்.

ஹிந்துக்களுடைய பாத்யதைகளையும் செல்வாக்கையும் ராஜீயத்தில் காப்பதற்காக ஏற்பட்ட ஸ்தாபனம் ஹிந்து மகாசபை. இதற்கு ஹிந்துக்களே அங்கத்தினர்கள் ஹிந்து மகாசபைத் தலைவர் ஸ்ரீ ஸவர்கர் ஹிந்துக்கள் என்ற பதத்திற்கு இந்தியாவை எவர்கள் தாய்நாடாகக் கருதுகிருர்களோ அவர்களே ஹிந்துக்கள் என்றும் இன்னும் பலவிதமாக மனம்போனபடி சமயோசிதமாக பொருட்படுத்தியிருக்கிருர். அப்படியானல் இந்தியாவை தாய்நாடாகக் கருதும் கிருஸ்தவர்களும் மகம்மதியர்களும் கூட ஹிந்துக்கள் என்று சொல்ல வேண்டும். அங்கத்தினர்களின் லக்ஷணமே விளங்காத ஒரு சபையின் தன்மைதான் என்ன? எம்மதத்தின் மூலாதாரமாக கொள்கைகளை நம்பாதவர்கள் அம்மதத்தைச் சேர்ந்தவர்களல்ல என்ற நியமத்தால் ஹிந்து மதத்திற்கு மூல பூதமான வேத சாஸ்திரங்களை நம்பாதவர்கள் ஹிந்துக்கள் அல்லர்.

வேதசாஸ்திரங்களில் பூர்ணவிஸ்வாசமுள்ளவர்களே ஹிந்துக்கள். அவர்களை அங்கத்தினர்களாகவுடைய சபை தான் ஹிந்துமகா சபை என்ருல் அச்சபை வேதசாஸ்திர ஆஞ்ஞைகளுக்கு விரோதமாக இயற்றப்பட்டிருக்கும் சாரதாசட்டம் ஆலயப்பிரவேசச் சட்டம் இது முதலிய ஹிந்துமதத்தையே அடியோடு அழிக்கும் சட்டங்களை இது காறும் விலக்குவதற்கு கிளர்ச்சி செய்திருக்கவேண்டும். இச்சட்டங்கள் மத ஆசாரணைகளுக்கு முற்றிலும் முரண்பாடானவை என்பதில் ஆக்ஷேபனையில்லை. அப்படி இருந்தும் ராஜீயத்தின் முன்னேற்றத்திற்கோ மற்ற எக் காரணத்திற்காகவோ இவைகள் அவிசியம் செய்யத்தகுந்தன என்று ஹிந்து மகாசபை கருதினல் அவ்வங்கத்தினர் தங்கள் ராஜ்ய லோபத்தால் மதத்தைக் காப்பாற்றும் தங்கள் கடமையை நழுவவிட்டவர்களாக ஆவார்கள். இச்சீர்திருத்தங்களைத் தாங்கள் சட்ட பூர்வமாக வற்புறுத்த இஷ்டப்படாதவர்கள் என்றுதாங்கள் சொன்னலும் அவர்கள் ஹிந்துக்களையும், ஹிந்து மதத்தையும் காப்பாற்றுகிறவர்கள் என்று கொள்வது சரியல்ல. மகம்மதியர்கள்கூட ஹிந்துமத சீர்திருத்தங்களை வற்புறுத்தாத காரணத்தால் மகம்மதியர்களைக்காட்டிலும் இவர்கள் எவ்விதத்தில் மேலானவர்கள்.

ஹிந்துமகாசபை முக்கியமாக ஹிந்துக்களின் ராஜீய முன்னேற்றத்திற்குமட்டும் உழைக்கும் ஸ்தாபனமாகும். வர்ணுசிரம ஸ்வராஜ்ய சங்கமோவெனில் ராஜீய முன்னேற்றத்திற்கு உழைப்பதுடன் அம்முன்னேற்றமோ அம்முன்னேற்றத்தை அடையக்கூடிய முறைகளோ வர்ணுசிரம தர்மங்களுக்கு முறண்படாமல் இருக்கும்படி கவனித்து, தேசத்தின் முன்னேற்றம் வர்ணுசிரம தர்ம பரிபாலத்தினல் தான் சித்திக்கிறது என்ற உண்மையான நோக்கத்துடன் அரும்பாடுபட்டு வருகிறது. உண்மையான சாந்தம் அஹிம்சை ஸத்தியம் இவைகளுக்கு மத ஆசாரங்களே முக்கிய காரணங்களாகும். மதத்தின் ஆசரணைகள் நிரந்தரமாக பொது மக்களிடம் இருந்தால் அல்லது அத்தேசம் அமைதியுடன் சுகமாக வாழமுடியாது. இப்பொழுது நடக்கும் ஐரோப்பிய மகா யுத்தத்திற்கும் அதனல் ஏற்படும் அழிவிற்கும் காரணம் முக்கியமாக அத்தேச மக்களின் மதப்பற்றற்ற மிருகத்தன்மையாகும்.

விலை மதிக்க ஒண்ணுத விவேகத்தைப் பெற்ற ஒவ்வொருவனும் நித்தியானந்தமான பேரின்பத்தை அடைய சாதனங்களை கடைப்பிடிப்பதால் தான் மிருகத்தைக் காட்டிலும் மனிதன் மேலாகக் கருதப்படுகிருன். அப்பேரின்பத்திற்கு மார்க்கங்களை புகட்டுவதே மதம் எனப்படும். அப்படியே ஹிந்துக்களுக்கும் மகரிஷிகளால் கண்டு அனுபவிக்கப்பட்ட வைதிக வர்ணுசிரம தர்மங்களே பேரின்பத்திற்கு முக்கிய சாதனங்களாகும். किं नोराज्येन गोविन्द किं भोगैः जीवितेनवा ।

ஹே கோவிந்தா, என்னல் உபயோகிக்கத் தகுந்த பெரியோர்களைக் கொன்று இந்த மூன்று லோக ஆதிபத்தியமும் கிடைப்பதால் எங்களுக்கு என்ன லாபம்? போகங்களால்தான் என்ன உபயோகம்? என் வாழ்வால்தான் என்ன லாபம்?

श्रेयान् स्वधर्मो विगुणः परधर्मात्स्वनुष्ठितात् ।

தனக்கு ஏற்பட்டிருக்கும் மதாசரணைகள் குணமற்றதாயும் கஷ்டமாயும் பொது ஜனங்களுடைய அபிப்பிராயத்திற்கு மாருகவும் தோன்றினுலும் அவைகளே செய்யத்தகுந்தன. பிறருடைய தர்மங்களை அனுஷ்டிப்பதால் ராஜ்ய லாபம் கிடைப்பதாகத் தோன்றினுலும் அவைகளைக் காட்டிலும் தன்னுடைய வர்ணுசிரம தர்மங்களைச் செய்வதினுல் மரண பர்யந்தமான கஷ்டங்கள் ஏற்பட்டாலும் அவைகளே மேல் என்ற கீதா வாக்கியங்களையும் கவனித்தால் வர்ணுசிரம தர்ம ஆசரணைகளே எல்லாவற்றிலும் விலை மதிக்க முடியாத அரும் பெரும் செல்வமாகும் என்று ஏற்படுகிறது. இச் செல்வத்தைப் புறக்கணிப்பதால் கிடைக்கும் போல் தோன்றும் ராஜ்ய லாபம் ஹிந்துமத தர்மத்திற்கு விரோதமேயாகும். ஹிந்து மகா சபையோவெனில் முக்கியமாக ஹிந்துக்களுக்கு ராஜீயத்தில் செல்வாக்கு ஏற்படுவதற்குமட்டும் உழைக்கும் ஸ்தாபனமானதாலும், அம்முக்கிய கோரிக்கைக்கு முரண்படும் ஹிந்து மத கோட்பாடுகளையும் ஆசரணைகளையும் அலக்ஷியம் செய்து தங்களுடைய ராஜீய நோக்கத்தைமட்டும் ஹிந்து மத தர்மங்களைக் காட்டிலும் முக்கியமாகக் கருதுவதால் அது ஹிந்து சமூகத்திற்குப் பாடுபடுவதாக பெரும்பாலோர் சொன்னலும் உண்மையாக அது அப்படியில்லை. வர்ணுச்ரம தர்மத்துடன் கூடிய ராஜீயச் செல்வாக்குத் தனி அடையத்தகுந்தது என்று ஹிந்து மதம் கூறுவதாலும் இதற்கு விரோதமில்லாத ராஜீய முன்னேற்றத்தையே நோக்கமாகக்கொண்ட வர்ணுச்ரம ஸ்வராஜ்ய சங்கமே உண்மையாக ஹிந்துக்களின் முன்னேற்றத்திற்கு எவ்விதத்திலும் உழைத்து வரும் ஸ்தாபனம் என்பதை எவரும் ஆக்ஷேபிக்க முடியாது. இந்த வைதீக மத நோக்கத்திற்கு விரோதமாயிருக்கும் எந்த சபைகளும் உண்மையில் ஒருவித சிரேயசும் பொதுமக்களுக்கு அளிக்க முடியாத காரணத்தால் அவைகளில் அவர்கள் சேர்ந்து நஷ்டமடையாதபடி தடுக்க ஏற்பாடுசெய்வது ஹிந்துக்களின் கடமையே.

(தொடர்ச்சி 6ம் பக்கம் பார்க்)

வியாக்யானங்களும் அவைகளுக்கு அர்த்தம் செய்யும் முறையும்.

(குலபதி பி. ஏ. சுப்ரமண்ய அய்யர்)
ரிடயர்ட் ஹேட்மாஸ்டர் திருவல்லிக்கேணி

உயர்ந்த ப்ராசீன கிரந்தங்களுக்கு வியாக்யானங்கள் மிகவும் அவச்யம். அந்த வ்யாக்யானங்கள் இல்லாமற்போனால் கவிஹ்ருதயத்தை, அதாவது, கிரந்த கர்த்தாவின் மனப்பாங்கை எளிதில் அறிந்துகொள்ள முடியாது, என்பது நம் தேசத்தில் யாவரும் கொண்ட கொள்கை. ஆயினும், ஒன்றுக்கு மேற்பட்ட ப்ராசீன வியாக்யானங்கள் ஒரே கிரந்தத்துக்கு இருந்து, அந்த வியாக்யானங்களுள் அர்த்த பேதங்கள் காணப்படின், நாம் செய்யவேண்டியது என்ன? இவ்விதம் அர்த்த பேதங்கள் காணப்படும் ஸந்தர்ப்பத்துக்கு முன்னும் பின்னும் உள்ள கவியின் மனப்போக்கை நன்றாக கவனித்து, அதற்கு எந்த வியாக்யானம் ஒத்திருக்கிறதோ அதையே தான் நாம் ஒப்புக்கொள்ளல் பொருந்தும். அதற்கு விரோதமாயுள்ள வியாக்யானங்களை இந்த சந்தர்ப்பத்தில் தள்ளவேண்டுமே யல்லாது, மற்ற இடங்களில் கூட அவ்வியாக்யானங்களைத் தள்ளவேண்டு மென்று சொல்வது நியாயமல்ல.

ஓர் உதாரணம்

சுந்தர காண்டம், 42ம் சர்க்கத்தில் ஸீதா தேவியைப்பார்த்து, 'உன்னுடன் பேசிக் கொண்டிருந்தவன் யார்? எங்கிருந்து எதற்காக வந்தான்? உன்னுடன் ஏன் பேசிக் கொண்டிருந்தான்?' என்று ராக்ஷஸிகள் கேட்டார்கள். அதற்கு ஸீதை பொய்சொன்னதாக அபிப்பிராயம் கொண்டு, ஸீதையின் மொழிகளுக்கு வியாக்யானம் செய்து, அவ்விதம் பொய் சொன்னது தன் சினேகிதனை காப்பாற்றுவதற்காக சொன்னதாகையால் அது அதர்மமாகாது என்று சாதித்து, அதற்குப்பிரமாணச்லோகத்தையும் எடுத்து ஒரு வியாக்யானத்தில் எழுதப் பட்டுள்ளது. ஆனால் வால்மீகியின் வாக்யங்களை ஆலோசித்துப் பார்த்தால் மேற்சொன்னபடி பொய்யை ஸீதா சொன்னாளென்று நாம் கொள்ள வேண்டுவதில்லையென்று நன்றாய் புலப்படும். எவ்விதம்? வந்தவன் தன்னிஷ்டப்படி ரூபத்தை எடுத்துக்கொள்ளக்கூடும். இது விஷயத்தை ராக்ஷஸ ஸ்திரீகள் கவனித்தார்கள். தேவியும் கவனித்தாள். வந்தவன் ஸ்ரீ ராம கதையை சொல்லிக் கொண்டுவர அதை தான் ஆனந்தத்துடன் கேட்டுக் கொண்டிருந்தபோதிலும், அவன் தனக்கு கிட்ட நெருங்கி வந்தபோது, ஸீதாதேவி என்ன செய்தாள், பிறகு என்னசொன்னாள்? கிட்ட நெருங்க ஆரம்பித்ததும், ஸீதா தேவியின் முகத்திலிருந்த பிரகாசம் நீங்கியது, அவனைப் பார்த்திருந்தவள் முகத்தை உடனே திருப்பிக்கொண்டாள். மௌனம் ஸாதித்தாள். பிறகு கண்ணும் கண்ணீருமாய் அவனைப்பார்த்து, ஹே, ராவணா! ஏற்கனவே நீ என்னை ஹிம்ஸித்தது போதாதா? இந்தமாதிரியும் வேறு உருவம் கொண்டு வந்து என்னை இன்னும் கஷ்டப்படுத்தலாமா?' என்று கதறினாள். ஆயினும் அவன் தன் பர்த்தாவின் அங்குலீயகத்தைக்கொண்டு வந்த காரணத்தால் அவன் தன் நாதனுக்கு மித்ரன் தான் என்பதை மாத்திரம் நிச்சயமாகத்தெரிந்து கொண்டாளே யல்லாது, அவன் உண்மையில் யார் என்பதை தேவி தெரிந்துகொள்ளவேயில்லை. தெரிந்துகொள்ளமுடியவும் முடியாது. ஏன் முடியாது? தன் ரூபத்தை மாற்றி வேறு ரூபத்தை எடுத்துக்கொள்வது தனக்கு ஸாத்யமாகாததால் தான். இந்த விஷயங்களை விளக்கியேதான் தேவி மறுமொழி கூறுகிறாள். அதில் ஒருவிதமான பொய்யும் இல்லை யென்பது ஸ்பஷ்டமாகவே விளங்குகிறது. இது போன்ற வேறு உதாரணங்களும் வியாக்கியானங்களில் காணப்படுகின்றன. வாலி வதமும் அவைகளில் ஒன்று.

வாலிவதம்

நான் இந்தப் பத்திரிகையில் எழுதியுள்ள முதல் கட்டுரைக் கடைசியில் பின் வருமாறு கூறியிருக்கிறேன்:—

ஸ்ரீ ராமர் சுக்ரீவன் முதலிய ஆறுபேர்களுடன் சேர்ந்தே கிஷ்கிந்தைக்குச் சென்றார்கள். அங்கே மரங்களின் பின்மறைந்து எல்லோரும் நின்று கொண்டார்கள். சுக்ரீவன் ஸ்ரீராமருடன் பேசிக் கொண்டிருந்த வண்ணமாகவே யிருந்து வாலியை சண்டைக்கு அழைத்தான். அவனும் வந்தான் இருவருக்கும் போர் நிகழ்ந்தது. இந்த சமயத்திலாவது, பிறகாவது ஸ்ரீராமர் தாம் நின்ற இடத்தை விட்டு வேறு இடம் சென்றதாக வால்மீகத்தில் வார்த்தைகளும் இல்லை. ஊகிக்கும் படியாகவும் இல்லை. மரங்களின் பின்மறைந்து நின்றார்கள் அல்லவா, என்றால் அதற்கு ஸமாதானம் என்ன? வாலியும் அந்த மறைந்து நின்ற இடத்துக்கு தானே வந்தான் என்பதாம். இவ்விதம் அர்த்தம் ஸ்பஷ்டமாக விளங்குகிறது என்பதே என் கொள்கை. ஸ்ரீராமர் தாம் மரங்களின் பின், வாலி தம்மை பார்க்கவே முடியாமல் நின்று கொண்டு, பாணத்தை அவன் மீது போட்டார் என்று கொள்வது நியாய மேயல்ல.

வாலிவத ஸம்பந்தமான வியாக்யானங்கள்

கீழே விழுந்த பிறகு, வாலி ஸ்ரீராமரைப் பார்த்துச் சொன்ன மொழிகள் கிஷ்கிந்தா காண்டம் 17ம் ஸர்க்கத்திலும் பிரபுவின் மறுமொழி 18ம் ஸர்க்கத்திலும் உள்ளன. இவைகளுக்கு நான்கு முக்ய வியாக்யானங்கள் பிரசுரிக்கப் பட்டுள்ளன. அவைகளாவன: கோவிந்த ராஜீயம் மஹேச்வர தீர்த்தீயம், திலகம், டீகாசிரோமணி இந்த டீகா சிரோமணி வியாக்யானம் அதிகமாய் தென்னிந்தியாவில் கிடைப்பதில்லை. பம்பாய் குஜராத்தி ப்ரிண்டிங் பிரஸ் பதிப்பில் விஸ்தாரமாய் காணப்படுகிறது. ப்ராசீனம் எனறே அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்த டீகா சிரோமணியில், 'வ்ருக்ஷை: ஆத்மானம் ஆவ்ருத்ய', என்பதற்கு மரங்களின் நிழலில் நின்றார்களே யன்றி மறைந்து நிற்கவில்லை யென்றும் பராங்முகவதம் செய்தீரே என்று பருஷமாக (நிஷ்டூரமாகக்) காணப்படும், 'பராங்முகவதம் க்ருத்வா' என்ற ச்லோகத்துக்கு எழுதியுள்ள வ்யாக்யானத்தில் பின் வருவது காணப்படுகிறது.

"அங்யேக யோத்தும் ஆச்ரித கோபோஹம் இதி உக்த்யா ராமசுக்ரீவயோர்மைத்ரீ ஜாதேதி தயோச்ச ஐக்யமேவேதி அம்சே வாலிந: பரம அஞ்ஞானம் சூசிதம்.

அதாவது பராங்முக வதம் என்று வாலி சொல்வது ஸ்ரீராமர் சுக்ரீவனுடன் ஸக்யம் செய்துகொண்டு ஐக்யம் ஆனார்கள் என்பதை அறியாமல் சொன்ன வார்த்தையே. உண்மையில் பராங்முக வதமே இல்லை என்பது இந்த வியாக்யானத்தின் தாத்பர்யம் என்று ஏற்படுகிறது. இதற்குப்பின் வரும் சுலோகங்களுக்கும். பராங்முக வதத்தை ஸ்ரீராமர் செய்யவேயில்லை அதாவது அதர்ம யுத்தத்தை போடவேயில்லை என்பது பொருந்தும்படியாகவே வியாக்யானம் செய்யப்பட்டிருக்கிறது. இதை நாம்ஒப்புக்கொண்டு வால்மீகத்தில் ஸ்ரீராமர் மறைந்தே கொன்றார் என்பதற்கு ஆதாரமும் இல்லை யென்று கொள்ளுதலே உத்தமம்.

இதர வியாக்யானங்கள்

இதர சிலவியாக்யானங்களிலோ, ஸ்ரீராமர் மறைந்த நின்றே வாலியின் மீது பாணத்தைப்போட்டார் என்றும், அவ்விதம் செய்தது மனுஸ்ம்ருதி வாக்யத்துக்கு விரோதமானதால், அதர்மம் தான் என்றும், ஆயினும் வாலி மனுஸ்ம்ருதி பிரமாணத்தையொட்டி கட்டாயம் கொல்லப்பட வேண்டியவனாகையால், மேற்சொன்ன அதர்மம் நீங்கிவிட்டது என்றும் பொருள்கூறும்படி சொல்லப்பட்டிருக்கின்றதாக ஸாதிக்கின்றனர். இவ்விதம் ஒரு தர்ம கார்யம் வேறொரு அதர்மத்தை நீக்கியது என்று அர்த்தம் சொல்வது அயுக்தம். மேலும் நான், ஏற்கனவே விவரித்துள்ள படி டீகா சிரோமணி வ்யாக்யான ரீதியாய் ஆலோசித்தால் இவ்விதம் பரஸ்பர விரோத பாவமுள்ள அர்த்தத்தைச் சொல்லித்தான் தீரவேண்டும் என்ற அவசியமும் இல்லை யென்பதும் தெளிவாய் விளங்கும்.

ஹிந்து மஹா ஸபையும் ஸனாதநிகளும்.

(5-ம்பக்கம் தொடர்ச்சி)

ஆதலால் ஒவ்வொரு ஜாதி ஹிந்துவும் தன்னுடைய வைதீக தர்மாசரணையை செய்து அதனால் இஹத்தில் ராஜ்ய சுகத்தைப் பெற்று மறுமையில் பேரின்பத்தையும் அடைய உழைத்துவரும் அகில இந்தியா வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கத்திற்கு அங்கத்தினராகச் சேர்ந்து சங்கத்தின் பலத்தை விருத்தி செய்து ஜாதி ஹிந்துக்களின் ஆத்ம சக்தியைப் பெருக்கி சர்வேச்வரனுடைய பேரருளைப் பெருவாராக.

மேலும் மதத்தைத் துறந்து மத வாசனையற்று மேல்நாட்டு நவீன நாகரீகத்திற்கு அடிமைகளாகி தேச முன்னேற்றமென்ற வியாஸத்தால் ஹிந்து மதமாகிய நந்தவனத்திற்கு கோடாலிக் காம்புகளாக அமைந்த சில விஷமிகளின் தந்திரத்தால் செய்யப்பட்ட அன்யாய மத சீர்திருத்த சட்டங்களை ஒழிக்க இரவும் பகலும் சுயநலமற்று உடல் பொருள் ஆவி இம்மூன்றையும் தியாகம் செய்து தர்மமே மூர்த்திகரித்ததுபோல் விளங்கும் அகில இந்தியா வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கத்தின் அத்யக்ஷ பதவியை வகிக்கும் மதுரை ராவ்சாகிப் என். நடேசய்யர் அவர்கள் செய்யும் அரும் பெரும் முயற்சிகளைப் பாராட்டி அன்னவர்களுக்கு ஒவ்வொரு ஹிந்துவும் கிருதஞ்ஞதை தெரிவிக்க கடமைப்பட்டவராவர். ஆண்டவன் அருள் சுரக்க—அன்பே சிவம்.

ஆத்ரேய ரஸாயனம்.

நாடி நரம்புகளுக்குப் பலத்தைக் கொடுக்கும். சரீரபுஷ்டியைச்செய்யும் அசதி களைப்புச் சோர்வுகளை உடனே நிவர்த்திசெய்யும். நல்ல பசி எடுக்கும். இழந்த பலத்தை திருப்பி அளிக்கும். உத்தம ரஸாயனம்.

ஆத்ரேய ஆயுர்வேதிக் ஒர்க்ஸ்,
தென்னூர்ரோடு, திருச்சினப்பள்ளி

ஸ்தாபகர்:-
V. B. நடராஜசாஸ்திரீ,
ஆயுர்வேதாசார்ய (Regd)

மதுரையில்

ஆஸ்திக ஹிந்து ஸ்திரீ ஸம்மேளனம்.

குடந்தை ஆஸ்தீக ஸ்திரீகள் ஸங்கத்தலைவி வி. செம்பகத்தம்மாள் அக்கிராசனப் பிரசங்கம்.

(சென்ற வாரத்தொடர்ச்சி)

ஆனல் இந்த மஹாயுத்தத்தின் விளைவாக ஏற்பட்டுள்ள பிரச்னைகளை நாம் அலக்ஷியம் செய்ய முடியாது. உலக மக்கள் திடுக்கிடும்படியான நாசகாரியான ஆயுதங்கள் திடீர், திடீர், என்று தோன்றும் வகையும் ஜனநாயகத்தின் கடைசி அத்யாயம நடைபெறும். இப்பொழுது சாசுவதமான உண்மை ஜனநாயகத்தைப்பற்றிப் பேச இடமே இல்லை. இப்பொழுது ஜனநாயகம் நாசகாரியே. வெடிகுண்டு வீச்சால் லக்ஷக் கணக்கில் ஜனங்கள் மடிவதையும். கோடிக் கணக்கில் பணம் வீணுவதையும் நாம் பெரிதாக நினைக்கக்கூடாது. மேதாவிகளின் உலகத்தில் பெரும் புரட்சி ஏற்பட்டுவிட்டது. இது ரத்த வெறிகொண்டோ அடக்க மதப்பித்துக்கொண்டோ, பதவி மோஹம் கொண்டோ ஏற்பட்டதல்ல. இதை ஆயுத பலத்தினலோ, அதிகார பலத்தினலோ கக்ஷி பலம் கொண்டோ அடக்க முடியாது.

உலக நாகரீகத்தின் அஸ்திவாரமே ஆட ஆரம்பித்து விட்டது. தீர்க்க தர்சிகள் நாகரீகத்தின் போக்கில் வெறுப்புக்கொண்டு விட்டார்கள். ஆத்மார்த்த தத்துவத்தை அடியோடு அலக்ஷியம் செய்தும் தர்மா தர்மம் பரலோகம், தைவபயம் இவைகளைச் சிறிதும் கவனிக்காமல் பொறுப்பற்றமுறையில் வளர்க்கப்பட்ட நாஸ்தீக நாகரீகம் உச்ச ஸ்தானத்தை உலக சரித்திரத்தில் அடைந்தது; அது தலைவிரிகோலமாகத் தாண்டவமாடிற்று. இதைக்கண்டு மயங்காதாரில்லை. ஆனல் இதன் விளைவு என்ன? ஒரு கோரயுத்தம் நடந்து அதன் வடுக்கள் மறைவதற்கு முந்தியே மற்றொரு கோரயுத்தத்தை நாம் காண நேரிட்டுவிட்டது.

இதற்குக் காரணம் என்ன? மனித ஸமூஹத்தின் வாழ்க்கையில் மதம் செல்வாக்குப்பெருததே காரணம். மேனட்டிஅுள்ள மதங்கள் மனிதனின் வாழ்க்கையில் சாதச்வ சாந்தி ஏற்பட உதவவில்லை. ஸமூஹ அரசியல் பொருளாதாரத் துறைகள் மதத்தை அடிப்படையாய்க்கொள்ளவில்லை. இதனல் நாகரீகத்தில் வியவஸ்தைக்கே இடமில்லாமல் போய்விட்டது. எங்கும் ஒரே குழப்பம் ஏற்பட்டுவிட்டது. இந்த ஆபாஸ நாகரீகத்தைக்கண்டு மோஹிப்பவர்களுக்கு ஒரு வார்த்தை! வர்ணச்ரம தர்மயானது இந்த தேசத்தில் இன்றுவரை கொள்கை அனுஷ்டானம் இவைகளில் இருந்துவருகிறது. இதனலேயே ஸமூஹப் பொருளாதாரப் புரட்சி இங்கு ஏற்படவில்லை. நம்முடைய மதிமயக்கத்தால் ஹிந்து நாகரீகத்தின் மேன்மையை உணராமல் அதை அலக்ஷியம் செய்து நாசகாரியான நவீன நாகரீகத்தைப் புகுத்தக் கூடாது. அவ்விமசய்தால் மக்களுக்கு நாம் துரோஹம் செய்தவர் களாகிவிடுவோம். சாந்தமாக நடை பெற்றுவரும் ஹிந்து நாகரீக வாழ்க்கைக்கு உலை வைத்தவர்களாகி விடுவோம். மேனட்டு நாகரீகம் இனி உலகுக்கு வேண்டாம்.

மனித வாழ்க்கையில் ஸ்திரமான சாந்தியை உண்டு பண்ண வர்ணச்ரம தர்மமே உயர்ந்தது என்று நிரூபிக்க இது ஓர் அரிய ஸந்தர்ப்பம், இந்த உண்மையை யுத்தம் உலகுக்கு தெரிவித்து விட்டது. ஹிந்துமதம் பரலோகத்தை மட்டும் நம்பிக் கனவு காணும் மதமல்ல. வீணை வேதாந்த விசாரத்தில் காலங் கழிக்கும் மதமுமல்ல. வர்ணச்ரம தர்ம மூலம் வாழ்க்கையின் வெற்றியை ஹிந்துமதமே ஸம்பாதித்துக் கொடுப்பது இந்தத் தத்துவத்தை நாம் யுவர்களுக்குப் போதித்து நவீன நாகரீகத்தில் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள மோஹத்தை நீக்க முயற்சிக்க வேண்டும். சுருங்கச்சொன்னல் இந்த மஹாயுத்தத்தினல் வர்ணச்ரம தர்மத்தின் மதிப்பு உயர்ந்து புதிய உலக வாழ்க்கைக்கு வர்ச்ரைம தர்மமே அஸ்திவாரமாக அமைப்போகிறது. உலக சரித்திரத்தில் தான் இழந்த பதவியை ஹிந்துமதம் மறுபடியும் அடையப்போகிறது. இந்தப் புதிய உலகிலும், அது ஆரம்பிக்க ஏற்பட்ட முயற்சிகளிலும், நாம் பூரணப் பங்கெடுத்துக் கொள்ளவேண்டும்.

இந்தியா ஸம்பந்தப்பட்டவரை உள்ள நிலமை என்ன? ஹிந்து மதம் உலக மதங்களுக்கே தகப்பன் போன்றது. வர்ணச்ரம தர்மமே அதனுடைய உயிர். தர்மா தர்மங்களை அரசியல் அதிகார மூலமே நிறைவேற்றலாம். அடிமைத்தனத்திலிருந்து மீண்டு அரசியல் அதிகாரத்தைப்பெற்று கர்மா தர்மங்களை ரக்ஷிக்கவே இந்தியாவில் தேசியஇயக்கம் தோன்றியது. ஆனல் துரதிருஷ்ட வசமாக தேசிய இயக்கத்தில் ஈடுபட்டுள்ள எந்த ஸபையும் எந்த மனிதனும், இந்த உண்மையை அறிந்ததாய்த் தெரியவில்லை. மிதவாதிகளுடைய ஸபை ஆதி முதலே மேனட்டுப் பித்தர்களுடைய ஸபை ஆகிவிட்டது. அதைக்குறை கூற இடமில்லை. காங்கிரஸ் ஸபை அப்படி அல்ல. நம்முடைய உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணம் செய்து அதை வளர்த்தோம். அது செய்த உபகாரமென்ன ஹிந்து வாழ்க்கையைக் குலைத்துவிட்டது. சாரதா சட்டம், ஆலயப்பிரவேசச்சட்டம் இவை போன்ற சட்டங்களின் மூலம் ஹிந்துமதத்திற்கே உலை வைத்துவிட்டது. ஹிந்துக்கள் தங்களுடைய மதத்தின் மீதும் ஆசாரத்தின் மீதும் வெறுப்புக்கொள்ளும் படி செய்துவிட்டது. வருங்கால யுவர்களேயும், யுவதிகளையும் ஹிந்துமத நாகரீகத்வேஷிகளாக ஆக்கிவிட்டது.

காந்திப்பித்து காங்கிரஸ் பித்துக் கொண்ட யுவர்களும் யுவதிகளும் ஹிந்து நாகரீகத்தை தூஷித்து வெறுப்பதை நாம் காண்கிறோம். இந்நிலையில் நாம் செய்யவேண்டியது என்ன? பொறுப்பற்ற போலித் தேசிய வாதிகளிடமிருந்து காங்கிரஸைப் பிடுங்கிக் கொள்ள வேண்டும். இது ஸாத்தியமா? இல்லை! ஆகவே அதை அடியோடு அறவே ஒழிப்பதே நமது கடமையாயிருக்க வேண்டும். காங்கிரஸ் வாதிகள் இன்றுள்ளவர்கள் நிச்சியமாக, அரசியல் வாதிகளல்ல அரசியல் அறிவு அவர்களுக்கு இல்லை என்பது இரண்டேகால் வருஷ அலங்கோல ஆக்ஷியாலும், அதற்குப் பிறகு ஏற்பட்ட காரியங்களாலும் நிரூபணமாகிவிட்டது. அரசியல் ஸ்தாபனமான காங்கிரஸ் காந்தி மடமாகி விட்டது.

காங்கிரஸ் காரர்களுக்கு மதத்தைப்பற்றின கவலையோ, கவனமோ இல்லை. ஆனல் நம்மை அவர்கள் உபயோகப்படுத்திக் கொண்டு நம்முடைய மதத்தை அடியோடு அழிக்க முற்பட்டு விட்டார்கள். நம்மதமனது காங்கிரஸ் கூலியை நம்பி நிற்கவேண்டிய நிலைமை (அரசியல் விஷயத்தில் அதன் மீது நம்பிக்கை வைக்க இடமில்லை.) வந்துவிட்டது. இந்த காந்திக்குட்டி ஹிட்டிலரிஸத்தினிடம் நமது மதம் இன்று அகப்பட்டுக் கொண்டிருக்கிறது. உலக ஹிட்லரிஸம் அழியு போது இதுவும் அழிந்துவிடும் ஆனல் இது ஆயுதத்தினல் கிள்ளி எறியக் கூடியதல்ல. கட்டுப்பாடான பிரசாரம் வேண்டும் இதைப் பொறுப்புடன் நாம் நடத்தினல் நாம் வெற்றி பெறுவோம்.

காங்கிரஸ் காரர்களைக் குறை கூறுவதைக்காட்டிலும் அவர்களுடைய பொறுப்பற்ற நடத்தையும், அதனல் அவர்கள் தங்களுக்கும், ஹிந்து மதத்திற்கும் ஸம்பாதித்துக்கொடுக்கும் நாசங்களையும் கண்டு நாம் துக்கப்படவேண்டியதவசியம். வேடிக்கையாக வெடி மருந்தில் நெருப்பு வைக்கும் குழந்தைகள்போல் அவர்கள் நடந்து விடுகிறார்கள். அதன் விளைவாக ஆபத்துக்கள் ஏற்பட்டால் பொதுமக்களோடு தாங்களும் அதில் சிக்கி விழிக்கிறார்கள். சென்ற வருஷம் நடந்த ஆலயப்பிரவேசக்கிளர்ச்சியே இதற்குப்பெரிய உதாஹரணம். போலி ஹிட்லர் திருட்டுத்தனமாக மதுரையில் ஆலயப்பிரவேசத்தை நடத்தினர். அதன் விளைவைப் பாருங்கள். பதவி போயிற்று, பிரதி தினமும் ஸிம்லா யாத்திரை, வார்தாவில் கூட்டம் கூடாத நாள் கிடையாது.

ஜின்ன உறுமுகிறர். உரக்க கர்ஜிக்கிறர் வைஸிராய் கூட்டிக் கூட்டிப் பேசுகிறர். அறிக்கைகள் வந்தவண்ணமாகவே இருக்கின்றன. பயன் ஒன்றையும் காணேம். சட்டஸபை மெம்பர்களுக்குச் சம்பளம் போய் விட்டது, மாஜி மந்திரிகளுக்கு பதவி கிடைக்கப்போவதாகத் தெரியவில்லை, பயமுறுத்தி, பயமுறுத்தி தீர்மானங்கள் செய்தும் வைஸ்ராயினுடைய தயவையே எதிர்பார்க்கவேண்டிருக்கிறது. பிள்ளை வரம் கேட்கப்போனவள் புருஷனைப் பறிகொடுத்ததைப்போல் வைஸ்ராயைப் பயமுறுத்தி சுயராஜ்ஜியம் பெற அஹிம்ஸைக் கொள்கையைப்பறி கொடுத்ததுதான் மிச்சம். காங்கிரஸின் அக்கிரம நடத்தையால் அடிப்படையான பிரச்னைகள் திடீரென முளைத்து விட்டன. இந்தவருஷ அனுபவத்தால் இவர்கள் அரசியல் உலகிற்கு லாயக்கற்றவர்கள் என்றும் வீண் கலஹம் உண்டுபண்ணிவதில் ருசியுள்ளவர்களென்றும் தீர்மானமாகி விட்டது.

ஆகவே இந்த காங்கிரஸ்காரர்களை நம்பி இனி நாம் ஏமாறக்கூடாது- பிரிட்டிஷ் அரசாங்கம் ஸம்பந்தப்பட்டவரை ஒரு வார்த்தை, இந்தியாவானது இன்று ஒரு மார்க்கெட்டாக ஆகிவிட்டது. எந்த மதமும், எந்த வகுப்பும் குடியேறிச் செல்வாக்கு ஸம்பாதித்து இந்த தேசத்தின் அரசியலை ஆட்டி வைக்க இடமேற்பட்டு விட்டது. இந்நிலையில் இந்தியாவில் அரசியலும் மதமும் இனி ஒரு கணமும சேர்ந்திருக்க முடியாது. சட்ட ஸபை ஆக்ஷி இப்பொழுது நடந்துவருகிறது. சட்ட ஸபையில் யாரும் அங்கத்தினர் ஆகிறர்கள் மெஜாரிட்டி பலம் யார் கையிலிருக்கிறதோ அவர்கள் கையில் புனிதமான மதம் சிக்கிக்கொண்டு விடுகிறது. இது ஸஹிக்கமுடியாத நிலமை. இதற்குப் பரிஹாரமென்ன? சட்டஸபைகளுக்கு மத விஷயங்களில் அதிகாரமில்லாமல் செய்வதே. இதுதான் இந்திய அரசியலின் அடிப்படையாயிருக்கவேண்டும். புதிய அரசியல் ஏற்படும் காலத்தில் பிரிட்டிஷ் கவர்மெண்டு இதை மறக்கக்கூடாது. பிரிட்டிஷ் பிரதிநிதியாக இங்கு ஆக்ஷிபுரியும் வைஸிராயிடமோ, கவர்னரிட

(தொடர்ச்சி 8 பக்கம் பார்க்க)

ஆஸ்திக ஸ்திரீகள் மஹாநாடு
அக்கிராசனப் பிரசங்கம்.

(7-ம் பக்கம் தொடர்ச்சி.)

மோ நாங்கள் நம்பிக்கை வைக்க இடமில்லாமல் போய்விட்டது. அவர்கள் தர்மா தர்மத்தின்படிலத்து நடப்பதில்லை. சாரதாச்சட்டம் ஆலயப்பிரவேசச்சட்டம் இவைகளுக்குக் கையெழுத்திட்ட வைஸிராயையும் கவர்னரையும் நாங்கள் எப்படி நம்புவது. அரசியல் கக்ஷியோடு பேரம் பேச அவசியமும், இடமும் இருக்கும்வரை அவர்களை நாங்கள் நம்ப இஷ்டமில்லை. அவர்களுடைய உதவியும் நமக்கு வேண்டாம். அரசியலில் நம்முடைய பங்கை நாம் பூரணமாக எடுத்துக்கொள்ள நம்முடைய பலமே நமக்குத் தேவை. ஆகவே சட்டஸபைகளுக்கு அதிகாரமில்லாமல் செய்து விட்டால் எங்களுடைய மதம் அதிகாரிகளுடைய பேரத்திலிருந்து விடுபட்டுவிடும் இதுதான் எங்கள் பிரார்த்தனை.

ஸனாதனிகளுக்கு ஒரு வார்த்தை பக்தி மார்க்கத்தையும், ஞான மார்க்கத்தையும் நாம் விசாரித்து விசாரித்து அலுத்து விட்டோம். சோம்பேரிகளாகி விட்டோம்! உலகவாழ்க்கைக்கு அநர்ஹர்களாகி விட்டோம் இதனால் தர்மத்தைக் காப்பாற்ற ஏற்பட்ட பௌருஷம் நம்மிடமிருந்து மறைந்து விட்டது. இதுவரை நடந்த கோலாஹலங்கள் போதாதா? தர்மதேவதை உங்களைத் தட்டி எழுப்பவில்லையா? திண்ணை தூங்கிகளாக நாம் ஆகாமல், தீரர்களாக ஆகவேண்டும். வர்ணாச்ரம மார்க்கத்தை அறிந்து ஆராய்ந்து உபதேசித்து உலகத்திற்கு நாம் வழி காட்ட வேண்டும்

என்னுடைய உபந்யாஸத்தை முடிக்கு முன் நமது தலைவர் மஹரிஷி நடேசய்யர் அவர்களைப்பற்றி நாம் தியானம் செய்ய வேண்டிய தவசியம். அவரைப்பற்றிப் பேசும் ஸாமார்த்தியம் எனக்குக் கிடையாது தர்ம தேவதை அவதாரமே அவர், அவர் நீண்ட நாள் நம்முடைய இயக்கத்திற்கு உதவி செய்யப் பயன்பட வேண்டும் பகவான் நிச்சயமாக இந்த அருளைக் கொடுத்துத்தானாக வேண்டும்.

ஸஹோதரிகளே!

நான் மிகவும் படித்தவளல்ல, விசேஷ அரசியல் அநுபவம் பெற்றவளல்ல. ஆனால் தர்மத்திற்கு ஊழியம் புரியவேண்டுமென்ற அவாவினால் சில விஷயங்களைத் தெரிவித்தேன். நீங்கள் உயர்ந்த கருத்துக்கள் அடங்கிய தீர்மானங்களை நிறைவேற்றுவீர்கள். காங்கிரஸ்காரன் உறுமுகிறான். சீர்திருத்தவாதி சீறுகிறான்! நாஸ்திகன் பரிஹஸிக்கிறான்! தார்மிகன் தயங்குகிறான்! தர்மதேவதை தத்தளிக்கிறாள்! எழுந்திருங்கள்! எழுந்திருங்கள் !! எழுந்திருங்கள் !!! தர்மத்தைக் காப்பாற்றுவோம்!

வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கம்
அத்யக்ஷர் பிரசங்கம்

(2-ம் பக்கம் தொடர்ச்சி.)

அதை எதிர்த்து மிகப்பெரும் கிளர்ச்சி செய்தும் அதன்பிறகு அத்சியில் திட்டங்களும் ராஜாங்கத்தார் நிர்மாணம்செய்யும் மசோதாக்களும் சட்டங்களும் எப்பொழுது நம் தர்மங்களில் பிரவேசிக்குமோ அப்பொழுதெல்லாம் கிளர்ச்சிகளும் கூட்டங்களும் மஹாநாடுகளும் நடத்திப் பொதுஜனங்களின் எதிர்ப்பையும் தர்மத்திற்கு கேடுவிளைத்தால் அதை விளைப்பவருக்கே விளையும் கேட்டையும் தர்ம நிஷ்டர்களுக்கு உண்டாகும் துன்பத்தையும் எல்லோரும் அறியப்பறையறிவித்தும், 1939 ஹூ ஜூன்மீ முதல் தீண்டாதார் ஆலயப்பிரவேசக் கொடுமையால் நம்சமுகத்துக்கு ஏற்பட்டிருக்கும் பெருங்குறையை நிவர்த்திக்க ஸ்ரீமான் அய்யரவர்கள் தம் உடல் பொருள் ஆவி இடம் பொருள் ஏவல் கல்வி கேள்வி சலுகை செல்வாக்கு எல்லாவற்றையும் அர்ப்பணம் செய்தும் ஆற்றும் பெறும் தொண்டு ஒரு ஈஸ்வர துல்யனால் மட்டில் செய்யக்கூடியதேயொழிய ஒரு மனுஷ்ய கார்யமாக நினைக்கக்கூடியதன்று.

இதையொட்டி அவர்கள் வகுத்துள ஸனாதன தர்ம வித்யாலயமும் ஆஸ்திக ஹிந்து மாதர் சங்கமும் ஆஸ்திக பாலிகா சங்கமும், தாரமீக யுவக்சங்கமும் இளம்பிராய முதல் முதிர்ந்த வயதுவரை உள்ளநம்மவர் எல்லோருக்கும் ஒருங்கே உண்மை உணர்வைப்புகட்டி நல்வழிப்படுத்தி ஆட்கொள்வதில் அவர்களுக்கு இருக்கும் ஊக்கத்தையும் சிரத்தையையும் உணர்த்துகின்றன. இப்பெரியாரையும் அவர் அருந்தொண்டரையும் கண்டுணர்ந்தபின்பும் நாம் யாரும் இதில் ஈடுபடாது இருத்தல் தகுமோ ஆஸ்திக சிகாமணிகளே! நாம் எல்லோரும் இந்தப்பெருந்தொண்டிலீடுபட்டு ஒவ்வொரு ஊரிலும் இவ்வித ஸ்தாபனங்கள் ஏற்படுத்தி இளையோர் மூதல் முதியோர் வரை எல்லாரிடத்திலும் நம் மதக்கல்வியும் மேம்பட்டுத் தழைத்தோங்கி நம் தலைவர் காட்டும் வழியைப் பின்தொடர்ந்து அவருக்கு உறுதியாகவும் உண்மையாகவும் பாடுபட்டு அதனால் பாபங்கள் ஒழிந்து புண்ணியங்கள் மிகுந்து நம் கோவில்களும் பசுத்தமாகி ஒரு நிலைக்கு வர இறைவன் அருள்புரிவானாக. (ந-நி)

திருத்துறைப்பூண்டி.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள் அவர்கள் அனுக்ரஹத்தை முன்னிட்டு இவ்வூரில் திருக்குளம் ஸ்ரீ ராம மடத்தில் கும்பகோணம் பிரம்மஸ்ரீ ராமச்சந்திர சாஸ்திரிகள் அவர்களால் சென்ற 1½ மாத காலமாக ஸ்ரீமத் வால்மீகி ராமாயணப்ரவசனம் நடந்து வருகிறது. 25—9—40 ல் ஸ்ரீ சீதாகல்யாண கட்டம் நடந்தது. ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்களால் அனுக்ரஹித்து அனுப்பப்பட்டிருந்த சால்வை, விபூதி, குங்குமம், அக்ஷதை பிரஸாதங்களை ஸ்ரீ பவ ஔஷதசுச்வரஸ்வாமி கோவில் ஸ்ரீ நடராஜர் சந்நிதியிலிருந்து வேதகோஷங்களுடன், மேளவாத்தியங்களுடன், மகா ஜனங்களுடனும் ஸ்ரீ ராம மடத்திற்கு கொண்டுவந்து ஸ்ரீசீதா கல்யாண கட்டத்தில் ஷை சாஸ்திரிகளவர்களுக்கு ஸ்ரீ மகா சந்நிதானத்தின் அனுக்ரஹத்தை தெரிவித்து சால்வையை சமர்ப்பிக்கப்பட்டதுடன் மகா ஜனங்களுக்கு விபூதி அக்ஷதை, குங்குமப்பிரசாதங்கள் வினியோகம் செய்யப்பட்டது. ஸ்ரீபரமாசார்யாளின் அனுக்ரஹத்தால் எல்லாம் வெகு விமர்சையாக நடைபெற்றன. ந. நி.

ராமேச்வரம்

தார்மிக யுவர் ஸங்கத்தின் ஆதரவில் நடந்தகூட்டத்தில் சங்கமெம்பர் கல்யாணசுந்திரத்தின் மரணத்திற்கு அநுதாபம் தெரிவித்தும், கோட்டையூர் ஸனாதன தர்ம வித்யாலய ஸ்தாபனத்தை வாழ்த்தியும் ஸம்ஸ்கிருத பாஷை லக்ஷயமாக பப்ளிக் ஸர்விஸ் கமிஷன் செய்கையைக் கண்டித்தும் தீர்மானங்கள் செய்யப்பட்டன.

திருவேடகம்
வர்ணாசிரம ஸ்வராஜ்ய சங்கத்தின்
வருஷ பூர்த்தி மஹோத்ஸவம்.

விக்ரம-ஹூ புரட்டாசி-மீ 10உ புதன் கிழமை மாலை 4 மணிக்கு இவ்வூர் வேத சாஸ்திர பாடசாலையிலிருந்து திவ்ய அலங்கிருத சப்பரத்தில் பார்வதி பரமேஸ்வராள் படத்தை திவ்ய அலங்காரத்துடனும் 3 வேத பாராயணங்கள் வாத்திய கோஷங்களுடனும் ரத வீதியில் பவனி வந்து ஏடகநாதர் கோவில் சுகுந்தகுந்தளாம்பாள் சந்நதியில் சப்பரத்தை ஸ்தாபித்து ஷை சுவாமி அம்மனுக்கு அர்ச்சனை முதலானதுகள் மூலம் பிரார்த்தனை செய்து 7 மணிக்குமேல் சோளவந்தான் பிர்மஸ்ரீ சங்கர சாஸ்திரிகள் அக்கிராசனத்தின் கீழ் சுமார் 300 ஆஸ்தீக ஜனங்களடங்கிய அரும் பெரும் கூட்டம் நடைபெற்றது.

இவ்வூர் சாமவேத பாடசாலை உபாத்தியாயர் சுப்பிரமணிய ஸ்ரௌதிகள் அவர்களால் கடவுள் வணக்கம் நடைப்பெற்றது. அக்கிராஸனாதிபதியவர்களால் முகவுரை நிகழ்த்தப்பட்டு "தர்மம்" என்றதைப் பற்றி பேசினார்கள். ஆலயப் பிரவேசச் சட்டத்தையும், சாரதாச் சட்டத்தையும் கண்டித்தும், அவைகளை ரத்து செய்யக் கோரியும், ஹிந்து மத ஸ்தாபன போர்டை ரத்து செய்யக் கோரியும், பஞ்சமர்களை பொதுப்பாடசாலைகளில் சேர்ப்பதை ஆக்ஷேபித்தும், வங்க விதவா விவாஹ மசோதவைக் கண்டித்தும் தீர்மானங்கள் செய்யப்பட்டன.

தீர்மானங்களை பிரேரேபித்தும் ஆதரித்தும், ஸ்ரீமான்களான நாகேச்வர சர்மா, வெங்கடராம கனபாடி, கிருஷ்ணஸாமி கனபாடி, செவல்குளம், ஸுப்ரமணிய அய்யர் சுப்பிரமணிய சிரௌதி, வேனு முதலியார், நரஸிம்ம அய்யங்கார், சோளவந்தான் ராம கிருஷ்ண அய்யர் முதலியவர்கள் பேசினார்கள்.

ஸ்ரீ நாகேச்வர சர்மாவால் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் முடிந்தது. (ந. நி.)

கும்பகோணம்

27—9—40 வெள்ளிக்கிழமை கும்பகோணம் சோலையப்ப முதலி தெரு ஸ்ரீ விசாலாக்ஷி அம்மன் சன்னதியில் ஸ்ரீ சங்கர பகவத் பாதாளின் ஆக்ஞை பிரகாரம் மாலை 4½ மணி முதல் 6½ மணி வரையில் திருவையார் வேதாந்தரத்தினம் சாஸ்த்ர ரத்னாகரம் பிரமஸ்ரீ விச்வநாத சாஸ்த்திரிகள் அவர்கள் ஏகாதசியின் மகிமையும் வர்ணாசிரம தர்மம பிராம்மணன் செய்ய வேண்டியக் கர்மா இதுகளை பற்றி விசேஷமாக உபந்யஸித்தார்கள் ஸ்திரி புருஷர்கள் சுமார் 150 பேர்கள் விஜயமாகியிருந்தார்கள்.

9-வது ஏகாதசிவிழா ஸ்ரீ ராமஸ்வாமி சாஸ்திரியார் தலைமையில் நடைபெற்றது. பருத்தியூர் கோதண்டராம தீக்ஷிதர் துளசி மஹிமையைப்பற்றி பேசினர்.

Books by Mr. S. Aiyadurai Iyer,

	R.	A.	P.
Advaida Siddhantham	0	8	0
Ramayana as an illustration of Yoga Sastra	0	8	0
Bharatham & Bhagavatham in the light of Yoga Sastra	0	4	0
பொதுமத போதினி	0	4	0

கிடைக்குமிடம்:— ஸ்ரீ ஜனார்தன பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட், கும்பகோணம்.

Printed by S. Kalyanasundaram at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar and S. Kalyanasundaram.